தென்மொழி

தென்னவர் இனமே! தென்னவர் இனமே!

தென்னவர் இனமே! தென்னவர் இனமே!
என்னதான் இயப்பினும் இம்மியும் நெகிழாத்
தன்னுணர் வழிந்த தென்னவர் இனமே!

முன்னவர் தாங்கிய மொய்ம்புகள் குறைந்து
சின்னவர் ஆகிச் சீரழிந் தனையே!

அறமுறை பிழைபா அரசியல் திறம்பி
மறமுறை தழுவி மாண்பழிந் தனையே!

அருளியல் நெறியால் ஆக்கம் பகிர்ந்த
பொருளியல் தாழ்ந்து புன்மையுற் றனையே!

கலைமலி வாழ்க்கை கைநெகிழ்த் தின்று
புலைமலி காட்சிப் புரையோ டினையே!

பாலுறுந் தூய பசுந்தமிழ் மறந்து
மாலுறும் வேற்று மருள்மொழி பலவால்
கலப்பும் உலப்பும கழிவறைக் கொச்சையும்
அலப்புரை வழக்கும் அருப்பொரு ளின்மையும்
பேலுற விழிந்து மெய்ப்பொருள் தாழ்ந்து
காலுறும் அடிமை கைப்பற் றினையே!

பழிமிகும் இந்நிலை படிப்படி வீழ்ந்தி
இழிமிகுப் உன்னிலை ஏற்றம் கொள்ள
விழித்தெழு வாயோ; வீறுகொள் வாயோ?
அழித்தெழு தாத,எம் ஆர்வ எழுத்திறல்
செழித்த பெருப்புகழ் சேர
கொழித்த நடையிடாய், குமரியர் இனமே!

சுவடி 16
ஓலை: 11

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை
ஓர் உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0:784: பெருமையும், புகழும் மிக்க ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம். 'அசாம்' பற்றிய குறிப்புகள் பயனுடையவையாக இருக்கின்றன. இன்னும் தெரிந்து கொள்ளலாம் போலுள்ளது. இந்த மடல் எழுதும் இந்த நேரத்தில் இந்தியப் படையினர் அசாமின் ஒரு பகுதியில் நுழைந்து கலாம் விளைவிப்பவர் என்று இனவுணர்வு மிக்க அந்த மாநிலத்து மறவுணர்வு மிக்க மக்களைச் சுட்டு வீழ்த்தி இருக்கின்றனர். அடுத்த இதழில் இன்னும் பல தேவையான குறிப்புகளைத் தொகுத்து வெளியிடின் நன்ருக இருக்கும். 'சிம்பாவே' விடுதலை பற்றி ஏதேனும் குறிப்பு இருக்கும் என்று எண்ணினேன். அடுத்த இதழிலாவது வருமா....? —**பாவண்ணன்**, புதுவை-10.

0:785: தென்மொழியில் 'வினவிடை'ப் பகுதி வேண்டி விடுத்த பாடல்.

என்னுளம் குடிகொண்டு எண்ணத்தைச் சீர்செய்யும்
இன்றமிழ்ப் பாவின் ஏறே!
மன்னுளம் புரியவும் மயக்கினை யறுக்கவும் மாதிகை பெற்றம்
யாமே!
மின்னலாய்ப் பொருளினை மிகுத்திடும் வினவினை மேன்மையீர்
விளக்க வேண்டி,
இன்னுமோர் பகுதியை இன்னேநீர் தொடங்கவே
இறைஞ்சுவேன் வேண்டல் இதுவே.

—**அன்பு மணிமுத்து**. தமிழ்ச்சுடர், பழநி

0:786: அன்பார்ந்த ஐயா, வணக்கம். திரு. பெரு. தமிழ் வேந்தன் குறித்து திரு. குமர நடவரச ஈவப்பனுர் தென்மொழி இதழில் குறிப்பிட்டுள்ள கருத்து மிகக் கடுமையானது. அவர் 'விசிட்டர்' இதழில் அவ்வாறு எழுதியிருப்பினும் கூட அத்துணை வன்மையாக முதலிலேயே சாட வேண்டியதில்லை. திரு. பெரு. தமிழ் வேந்தனை நான் நன்கு அறிவேன். அவர் 'தென்மொழி அன்பர்' என்னும் சொல்லுக்கு முற்றிலும் தகுதியுடையவர். தூய தமிழ் பரப்பும் தகைமை சான்றவர். அவர் பணியாற்றும் பள்ளியில் தென்மொழி, தமிழ்ச்சிட்டுப் பாக்களே சுவரை நிறைத்துக் கொண்டிருப்பதை எப்போதும் யாரும் சென்று காணலாம். தென்மொழிக் கருத்துகளைப் பரப்புவதில் திரு. குமர. நடவரச ஈவப்பனுருக்கு திரு. பெரு. தமிழ்வேந்தன் எந்நிலையிலும் எச்சிறு அளவும் குறைந்தவரல்லர். அவர் மிதிவண்டி கூடத் தென்மொழியைப் பரப்பிக் கொண்டிருக்கும் பாங்கை அதனைப் பார்ப்போரெல்லாரும் உணர முடியும். எனவே, ஒருவரை நன்கு விளங்கிக் கொள்ளாமல் வன்சொல் வழங்குவது எந்த அமைப்பிற்கும், முன்னேற்றத்திற்கும் நன்மை பயக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்கள் அன்பன், —**பொ.ப. முகிலன்**, கூவலூர்.

(அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

நீங்கள் ஏமாறி வருகிறீர்கள்!

ஐயா அவர்கட்கு வணக்கம். ஒரு செய்தியைத் தங்கட்குக் கூற வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தேன். தாங்கள் அதனை எப்படி எடுத்துக் கொண்டாலும் சரி. மனத்திற் பட்டதைக் கூறி விடுகிறேன் நான் பார்த்துப் பழகிய அளவில், தென்மொழி அமைப்பினுள், ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல் என்பது மிகமிக அதிகமாகியுள்ளது. இதற்கு முதற் காவாக ஆகி வருபவர் தாங்கள் தாம்! தென்மொழிக்கு வரும் மடல்களைப் பார்த்து நீங்கள் மிகவும் ஏமாறுவதாக நான் கருதுகிறேன். மடல் எழுதத் தொடங்கும் பொழுதே "தண்டமிழ்த் தலைவா, ஒண்டமிழ்க் காவலா, தலைதாழ்ந்த வணக்கம், புல்லிய வணக்கம், பணிந்த கைகூப்பு, ஆய் - ஊய்" என்று புதுமுறைப் பிள்ளையார் சுழிகள் போடுவது, அவ்வளவும் ஏமாற்று. இப்படி எழுதுபவர்கள் உண்மையில் இப்படி இல்லை. தென்மொழி படிப்போர் உங்களிடத்தில் ஏதோ ஒரு மெலிவைக் கண்டறிந்து வைத்திருக்கிறார்கள். அதன் விளைவுதான் இப்படி எழுதுதல் எனக் கருதுகிறேன். நான் சொல்வதன்மேல் நம்பிக்கை இல்லை எனில், கடந்த பத்து அல்லது பன்னிரண்டாண்டுத் தென் மொழியை ஒருங்கே வைத்து, அவற்றில் வெளியாகியுள்ள மடல் களைப் புரட்டிப் பாருங்கள். முன்பு இப்படி 'ஆய் ஊய்' போட்டு எழுதியவர்களெல்லாம் இப்போது எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்தீர்களானால் இவ்வுண்மை புரியும். இப்படி அளவு கடந்து புகழ்ந்து இரண்டு மூன்றாண்டுகளுக்கு மடல் எழுதுவார்கள். பின்னர் "ஏய்! உன்னை அப்படி நினைத்தேன்; இப்படி நினைத்தேன்; பார்த்து விடுகிறேன்; கேட்டு விடுகிறேன்" என்று எழுதுவார்கள். சிலர், தொடக்க முதலே ஏமாற்றுகிறார்கள்; சிலர் தொடக்கத்தில் ஏதேதோ கற்பனை செய்து, அளவுக்கதிகமாக எதிர்பார்த்து ஏமாற்றமுற்று, இறுதியில் கூச்சல் போடுகிறார்கள். எனவே, தாங்கள் மடல்களை வெளியிடும்பொழுது, இந்த வெறும் புகழ்ச்சிச் சிண்டுகளை வெட்டி எறிந்துவிட்டு வெளியிடுங்கள்; இவை நன்றாகவே இல்லை.

அண்மையில், ஒருவர் செந்தமிழ் துள்ளத் தென்மொழிக்கு மடல் ஒன்று விடுத்திருந்தார். சிறப்பு மடலாக அது வெளியாகி இருந் தது. அவரே "விசிட்டர்" என்னும் இதழுக்கு மடல் ஒன்று எழுதி யிருந்தார். அதில் உண்மை' என்ற சொல்லைக் கூடப் போட மன மின்றி "நிஜம்" எனத் தேவமொழியால் அந்த இடத்தை நிரப்ப யிருந்தார். இவர்களை நீங்கள் இனம் காண இயலும் என நம்பி இயலவில்லை.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சாதி அமைப்பு களிலும் முப்முரப் பணியாற்றுவார்கள் தமிழினம்—மாந்தவினம் எனவும் பேசித் திரிவார்கள். இந்த இரட்டைப் போக்கு அப்பட்ட

மான ஏமாற்று என உறுதியாக நம்பவியலும். ஒருவன் மொழியில் தமிழனுகவும், இனத்தால் மாந்தனுகவும் இருக்கலாம். ஆனுல், "நான் வன்னியன்; நான் கொங்கன்; நான் முக்குலத்தோன்; என் சாதிக்காரர்களே ஒன்று சேருங்கள்" என்றும் கூறிக் கொண்டு, 'தமிழினம்—மாந்தவினம் என்றும் பேசித் திரிவது ஏமாற்றேயல்லாமல் வேறென்னவாக இருக்க வியலும்?

ஆகவே, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், ஆட்களை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளைத்தான். பொருளற்ற முகப் புகழ்ச்சியும், உண்மையை ஆழமாகப் பார்க்க வேண்டும் என்பதில் ஆர்வமின்மையும், மாற்றுக் கருத்தைக் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பாமையும், பிறரைப்பற்றி உண்மைக்குப் புறம்பாகச் சொல்வதில் பேரார்வமும் நிறைந்து நிலவும் இக்காலத்தில், எனது வேண்டுகோள் தேவையானதாகவே இருக்கக்கூடும் என நம்புகிறேன்.

இனி, தென்மொழியில், ஏதோ ஒரு மிகப் பெரிய சரிவு, தொய்வு தெரிகின்றது. தென்மொழி பழைய தென்மொழியாகவே இல்லை. இதன் சரிவிலே—தொய்விலே என் போன்றவர்கட்கும் கூடப் பங்கிருக்கும் என்றுலும், எங்களையெல்லாம் கடந்த ஆழமான சரிவொன்று அதிலே தென்படுகின்றது. அஃது இன்னதுதான் என்று சொல்ல எனக்குத் தெரியவில்லை. ஆனுல். தெரிவது உண்மை. அறிவும், உணர்வும் நிரப்பி நடந்து வந்த தென்மொழி எங்கே? இப்போது, சப்புற்று நடந்து வரும் தென்மொழி எங்கே? தென்மொழியிலே, 'ஒரு வீரவூழி (Heroic Age)" முடிந்து விட்டதோ எனக் கலங்க வேண்டியுள்ளது இப்போது தென்மொழியில் வரும் படைப்புகள் பலவற்றில் வறட்சிதான் தெரிகிறது. தங்கள் எழுத்திலும், முன்பு கண்ட செம்மாந்த மிடுக்கைக் காண வியலவில்லை. தாங்கள் என்ன நினைத்தாலும் சரி! மொழி—இன—நாட்டுணர்வு நோக்கில், உணராதார் உணர்வு பெறத் தென்மொழியை எடுத்தெடுத்து முன்பு அறிமுகம் செய்ததுபோல், இப்போது வரும் தென்மொழி இதழ்களை அறிமுகம் செய்ய இயலவில்லை. வறள்வுண்ட இவ்விடைக்காலம் எப்போது முடிவுபெறும் எனக் காத்திருக்கிறேம். மீண்டும் பழைய வீரவூழிக்குத் திரும்பாவிடினும், நிகழ்வுக்காலத்தை (Modern Age) நோக்கி அது வந்தாக வேண்டும் என உறுதியாக விரும்புகிறேம்.

உலகில் தமிழினத்தின் நிலையில், பல தேசவினங்கள் உள்ளன. அவற்றின்மேல் நாம் கொள்ளும் பரிவும், அவற்றின் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்குதலும் நமக்கு மிகத் தேவையானவை. அறிவொடு கலவா உணர்ச்சியும், உணர்வில் தோயா அறிவும் பயன் நல்க மாட்டாதவை. எனவே, தமிழருக்கு, உணர்வூட்டும் பணி

—தொடர்ச்சி 16-ஆம் பக்கம்

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி: 16 ஓலை: 11.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
விடை. தி. பி. ௨௰௧௧-
சூன்-சூலை-1980.

தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ இளமுருகன். அறி. இ.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன]

தேர்தல் படிப்பினைகள்!

நடந்து முடிந்த தமிழ்நாட்டுச் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வழக்கம்போல் பலரும் எதிர்பாராதனவாகவே அமைந்திருந்தன வேனும், நம் கணிப்பிற்கு அவை ஓரளவு பொருந்தியே இருந்தன. மக்கள் மன வியலைப் பற்றி இன்னும் நாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமெனினும், அரசியல்காரர்கள் அறிந்து வைத்திருப்பதை விட, சிறிது கூடவே அவர்களைப் பற்றி நம்மால் கணிக்க முடிந்தது. ஏனெனில் நமக்கிருக்கும் நடுநிலை உள்ளம் அதற்கு ஓரளவு துணையிருக்க முடியும். அளவுக்கு மீறிய நம்பிக்கையால் மக்களைத் தவறாகக் கணித்திருந்தனர் பலர். சிலர் அவர்கள் மேல் வைத்த நம்பிக்கையின்மையால் தமக்குக் கிடைத்த வெற்றியைக் கூட எதிர் பாராத வெற்றி என்று எண்ண வேண்டியிருந்தது. எஃது எப்படி யிருப்பினும் இந்தத் தேர்தல் முடிவுகள் நம் எல்லாருக்கும் சில நல்ல படிப்பினைகளை நல்கி யிருக்கின்றன.

வெறும் ஆரவார வீண் விளம்பரங்களால் நம் பொருளுக்குத் தான் கேடேயொழிய, பயன் குறைவாகத்தான் கிடைக்கும் என்பது அவற்றுள் ஒன்று. ஒன்றுமில்லாததை ஏதோ இருப்பதுபோல் மக்களுக்குச் சொல்லிவிட முடியாது. நமக்கிருக்கும் கொஞ்சம் தகுதியையும் மக்கள் மிகுதியாக மதிப்பிட்டு விடுவதைப் போலவே, நம்மிடமுள்ள கொஞ்சம் தகுதியின்மையையும் கூட மிகுதியாகவே அவர்கள் மதிப்பிட்டு விடுவார்கள் என்பதை முதலில் நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். எனவே நம் தகுதியின்மை வெறும் விளம்பரங்களால் மூடி மறைத்துவிடக் கூடியதன்று என்பதை நாம் உணரவேண்டும் தி. மு. க.விடம் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ கண்டு விட்ட குறையை, மிகவும் பெரிதாக மதிப்பிட்டு விட்டார்கள் என்பதையே இத் தேர்தல் முடிவுகள் நமக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டின. அ. தி. மு. க. குறையே உடையதன்று என்பதை அவர்கள் கண்டுவிட்டதாக நாம் பொருள் கொண்டு விடக் கூடாது. தி. மு. க.வின் மேல் உள்ள ஒரு நம்பிக்கையின்மை, அ. தி. மு. க.வின் மேல் ஒரு நம்பிக்கை கொள்வதற்கு ஒரு கரணியமாக அமைந்து விட்டது என்பதே உண்மை. மற்றபடி மக்கள் அறியாதவர்களோ குற்றவாளிகளோ ஆகிவிட முடியாது. அவர்களுக்கு வேண்டுவதெல்லாம் ஒரு நம்பிக்கையுடைய கட்சி தங்களை ஆளவேண்டும் என்பதுதான். குடியரசமைப்பில் மக்கள் கொள்ளும் இந்தக் கருத்தை எவ்வகை மாற்று விளம்பரங்களாலும் மாற்றிவிட முடியாதென்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, மக்கள் இன்னொன்றைத் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இத் தேர்தல் முடிவுகள் நன்கு கோடிட்டுக் காட்டியிருக்கின்றன. தேசிய உணர்வுகளை அவர்கள் நம்பவில்லை ஏனெனில் தேசியத்தின் பின்னால் உள்ள போலியுணர்வுகளையும், ஏமாற்றங்களையும், பதவி வெறிகளையும், கொள்ளையடிப்புகளையும் மக்கள்—குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள்—நன்கு அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள் என்பதையே நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். மேலும் இந்திரா காந்தியின் தேசியம் வல்லாண்மையை நோக்கியதாகவே இருக்கும் என்பதை தி. மு. க வை விட மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்கள். இது தி. மு. க. கற்றுக் கொடுத்த பாடங்களில் ஒன்றாகவே இருத்தல் கூடும். எந்த இந்திரா காந்தியை வல்லாட்சியின் மொத்த உருவம் என்று தி. மு. க. மக்களுக்கு அடையாளங் காட்டியதோ, அந்த இந்திரா காந்தியையே 'அன்னை' என்றும் 'அரசியல் தலைவி' என்றும் தி. மு. க. வண்ணித்துக் கூறிய பொழுது, அதனை அவர்கள் நம்ப அணியமாயில்லை என்பதை இத் தேர்தல் வழி மக்கள் வெளிப்படையாகக் கூறி விட்டனர் என்பதாகவே நாம் பொருள்

கொள்ளல் வெண்டும். எனவேதான் தி. மு. க.வின் பேச்சை மக்கள் -படித்த மக்கள் கூட—நம்ப மறுத்தனர். தி. மு. க.வின் மாநிலத் தன்னாட்சிக் கொள்கையும், இந்திராவின் வல்லாண்மைத் தேசியமும் நேருக்கு நேர் எதிரான கொள்கைகள். இவ்விரண்டு எதிரான கொள்கைகளும் தேர்தல் என்னும் பெயரால் தங்களிடம் இணைந்து நெருங்கி வந்தபோது, மக்கள் அவர்களின் வெளிப்புனைவு களை நன்று உணர்ந்து கொண்டதாகவே நாம் கொள்ள முடியும். இதைத் தி. மு. க.வினர் ஏன் விளங்கிக் கொள்ளவில்லை என்பதை நம்மால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஒருவேளை இந்திரா காந்தியின் தேர்தல் உதவியால் இவர்கள் மதிமயக்கம் கொண்டிருக்கலாமோ என்னவோ? நமக்குத் தெரியாது.

இனி, சட்டப்படி ஐந்தாண்டுக்கால ஆளுகைக்கென மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு கட்சியை, இரண்டாண்டுக்கால முடிவி லேயே, தனக்கென ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டு, நடுவணாட்சி கலைத்து விடுவதென்பது எவ்வகையிலும பொறுத்துக் கொள்வதாயில்லை. இது பற்றித் தொடக்கத்தில் தி. மு. க. கொடுத்த வாக்குறுதியையும் அது பின்பற்றவில்லை. 'அறிந்தோ அறியா மலோ மக்கள் அ. தி. மு. க வை அரசு கட்டிலில் ஏற்றிவிட்டார்கள். இனி, அவர்களின் முழு ஆளுமைக் காலம் வரை அஃது ஆளட்டும். இடையில் அதனை இறக்கிவிட நாங்கள் குரல் கொடுக்க மாட்டோம்' என்று தொடக்கத்தில் தி. மு. க.வும் கலைஞரும் பன்னிப் பன்னிப் பேசியிருக்கின்றனர். ஆனால் கற்பனை செய்யப் பெற்ற அக்கொடுமை காட்சியாக மலர்ந்த பின் அதனைக் கண்டித்துக் குரல் கொடுக்க அவர்கள் ஏன் தவறி விட்டனர்? 'தனக்கு இரண்டு கண்கள் போனாலும் தாழ்வில்லை. எதிரிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும்' என்னும் பகையுணர்வு அரசியலில் எதிரிக்குத்தான் ஊதியமாக முடியும் என்பதை இத் தேர்தல் முடிவு நன்கு உணர்த்தி விட்டது. இது மாற்றாள் குழந்தையைத் தன் குழந்தை என்று வழக்காடி, அது வெட்டுப்பட விரும்பிய பேதைப் பெண்ணின் கதையினைப் போன்றது. முடிவில் உயிர்க் குழந்தை மாற்றாளிடமே கொடுக்கப் பெற்று விட்டது. பதவி வேட்கை அரசியல் கொடுமையை ஒப்புக் கொண்டு விடக்கூடாது. எதிரியின் கழுத்துக்கு வரும் கத்தி, தன் கழுத்துக்கும் வர நேரமாகாது. தன் கத்தியால் வேண்டுமானால் எதிரியின் கழுத்தை வெட்ட முயற்சி செய்யலாம். மூன்றாமவர் ஒரு வரின் கத்தியால் எதிரியின் கழுத்தைப் பதம் பார்க்க நினைத்தது, தி. மு. க. வின் மேல் வெறுப்பையும், அ. தி. மு. க.வின் மேல் இரக் கத்தையும் மக்கள் கொள்வதற்குக் காரணமாகி விட்டது.

இனி, தி. மு. க.விற்கும், அ. தி. மு. க.விற்கும் ஏற்பட்ட போட்டி பங்காளிகள் சண்டையைப் போன்றது. இதில் மூன்றாமவர்

தலையிடக் காரணமில்லை. பங்காளிகளுக்குள் ஏற்பட்ட சண்டையைப் பங்காளிகளே மக்கள் மன்றத்தில் தீர்வு செய்து கொண்டிருக்கலாம். இதில் பொது எதிரியைத் தனக்குத் துணையாக்கிக் கொண்டது எவ்வகையிலும் சரியாகாது. தி. மு. க.விற்கு இதனால் ஒரு பெருத்த வரலாற்று இழிவு ஏற்பட்டதுதான் மிச்சம். அ. தி. மு. க.விற்கோ இதனால் பெரும் ஊதியம் ஏற்பட்டு விட்டதை எவரும் தடுத்துவிட முடியவில்லையே.

இனி, இவ்விடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டு விட வேண்டும். மக்களால் அதிகார முழுமையாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு மாநில ஆட்சியை, நடுவணரசு தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு இடையில் கலைப்பது எவ்வகையாலும் சரியாகாது. இதற்குரிய முறையில் அரசியலமைப்புச் சட்டம் கட்டாயம் திருத்தப் பெற வேண்டும். தலைமை யமைச்சருக்குத் தனிப்பட்ட முறையில் பிடிக்காத ஒரு மாநில ஆட்சி கவிழ்க்கப் பெறுவது, குடியரசு அமைப்புக்கே ஓர் அவமதிப்பாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஓர் ஆட்சி, அம் மக்களாலேயே திருப்பிப் பெற வாய்ப்பிருக்க வேண்டுமே யல்லாது, வேறு எவ்வகையாலும் அது கவிழ்ந்துவிட வாய்ப்பளிக்கக் கூடாது. இக் கொடிய தவற்றைச் செய்த இந்திரா காந்தியிடம் மறு தேர்தல் நடத்துவதற்கான செலவுத் தொகை முழுமையையும் இழப்பீடாகத் தண்டுதல் வேண்டும். தனிப்பட்ட ஒருவர்க்குப் பிடிக்கவில்லை என்பதற்காக, முன்பு மக்கள் தேர்ந்த ஓர் அரசு கவிழ்க்கப்படுவதென்பது அவ்வளவு எளிதான செயலாக இருந்துவிடக் கூடாது. ஆட்சியின் தலைமையிடத்தில் உள்ள ஒருவரின் விருப்பு வெறுப்புகளுக்குக்காக, மக்கள் வரிப்பணம் எவ்வளவு பாழடிக்கப் பெறுகிறது. ஒரு தேர்தலுக்காக எத்தனைப் பேர், எத்தனைப் பொருட் செலவில் எத்தனை நாள் உழைக்க வேண்டியுள்ளது. இப்பொழுது மக்கள் மீண்டும் அதே கட்சியை ஆட்சியில் அமர்த்தி முன்பு தாங்கள் செய்தது சரியென்று அடித்துச் சொல்லி விட்டார்களே, இக்கால் அவ்வுழைப்பும் இழப்பும் யாரால் ஈடுசெய்ய முடியும்? ஆட்சியைக் கவிழ்த்த அந்தத் தலைமை யமைச்சரைத்தான் இவ்விழப்புகக்குப் பொறுப்பாக்குதல் வேண்டும். இப்படி ஒரு சட்டம் இன்றி யமையாதது என்பதைத் தமிழ்நாட்டுத் தேர்தல் நன்கு உணர்த்தியிருக்கிறது.

இறுதியாக ஒன்றை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும். பொதுவாக இன்றைய அரசியல்காரர்களிடம் பொதுநலவுணர்வு மிகுந்திருப்பதாக நம்மால் கூற முடியவில்லை. தணியாத தன்னலவுணர்வுகளும், தனிப்பட்டவர் மேல் கொண்ட வெறுப்பு விருப்புகளும், பகையுணர்வுகளும், பதவியாசைகளும், அதிகார அங்காப்புகளும் வேறுபாடில்லாமல் பொதுநல உணர்வில் திரியும் எல்லாரிட

முமே நிறைந்துள்ளன. இதனாலேயே நம் நாட்டில் நலமிக்க ஓர் அரசை நம்மால் அமைக்க முடியவில்லை. நம் மக்களிடம் உள்ள கட்சி வெறி பொதுநலவுணர்வாக மலர்ச்சி பெறுதல் வேண்டும். இம் மலர்ச்சிக்குத் தடையாகவே நம் அரசியல் தலைவர்கள் உள்ளனர்.

கட்சிக்கென்று நடத்தப்பெறும் நாளிதழ்களிலும், கிழமையிதழ்களிலும் ஒன்று கூடத் தரம் மிக்கதாகவோ நல்லுணர்வு படைத்ததாகவோ இல்லை. மாற்றுக் கட்சியினரைத் தம் மனம் போனபடி திட்டித் தீர்ப்பதோ பழித்துரைப்பதோ இழித்துக் கூறுவதோ அவற்றின் அன்றாட வேலைகளாக விருக்கின்றன. வெட்கமற்ற அவற்றின் நடவடிக்கைகளால் இருதரப்பினரின் தரக்கேடுகளும், ஒழுக்கக் குறைவுகளும், பொதுநலக் கொள்ளையடிப்புகளுமே நடுநிலையுள்ளங் கொண்டவர்க்கு வருத்தத்தையும் நாணத்தையும் கவலைகளையும் விளைவிக்கின்றன. பலரின் அருவருப்பான கீழ்த்தரமான பேச்சுகளாலும் எழுத்துகளாலும் நடவடிக்கைகளாலும் அரசியல் ஈடுபாடே கொடுமையானதாகவும் அஞ்சத் தகுந்ததாகவும் போய் விட்டன. அரசியல் தலைவர்களின் உடைகள் வெள்ளையாய் இருப்பதைப் போல அவர்களின் உள்ளங்கள் வெள்ளையாய் இல்லை. அழுக்கேறி நாற்றமடிப்பவையாக விருக்கின்றன. அவர்கள் துண்டுகள் நீளமாய் இருப்பதைப் போல் அவர்களின் கொள்கைகள் நீண்டிருப்பதில்லை. நொடிக்கு நொடி அவை கூனிக் குறுகிப் போய்விடுகின்றன. மாற்றுக் கட்சியினரை வசை பாடுவதையே, அல்லது தம் கட்சித் தலைவர்களை அளவுக்கு மீறிப் புகழ்ந்து போற்றுவதையே ஓர் இலக்கிய மரபாக அவர்கள் ஆக்கிக் கொண்டுள்ளனர். நீள அகலச் சுவரொட்டிகள், ஆரவார வேடிக்கை விழாக்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் இவையே அரசியலாக ஊர்வலம் வருகின்றன. பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் கருத்துகள் எந்த ஓர் அரசியல் கட்சித் தலைவரின் வாயிலிருந்தும் வருவது அரிதாகவே இருக்கிறது. இந் நிலைமைகளெல்லாம் அடியோடு மாறினாலொழிய நம் அரசியல் பொதுநலவுணர்வுடையதாக ஆகிவிட முடியாது. பொருளாட்சி மிக மிக, அரசியலில் அருளாட்சி குடிகொள்வது இயலாது. தேர்தலில் வெற்றி பெற்றவர்க்கும் தோல்வியுற்றவர்க்கும் நடுநிலையாக நாம் கூறிக்கொள்ள விரும்பும் கருத்துகள் இவையே!

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

(௫௧-ஆம் பாட்டுத் தொடர்ச்சி)

இப் பாடல் தொடர்ந்த 12 பாடல்கள் **தென்மொழி**யில் **'தமிழ் நானூறு'** என்னுந் தலைப்பில் வெளிவந்து, அத் தொடர் முற்றுப் பெறாமையால் இந் **நூறாசிரியத்** தொடரின் கண் சேர்க்கப் பெறுகின்றன.

தும்பை சூடிலர் : போரெழுச்சிக்கு அடையாளமாகிய தும்பைப் பூவை அணியாது முனைந்த மாணவர் எழுச்சியைக் கூறியது. தும்பைப் பூவைச் சூடாது போருக்கெழுந்தனர் இவர் என்றது.

இடைவாள் செருகிலர் : தம் இடைகளில் வாள்களைச் செருகி யில்லர். மொழிப் போராகலின் கருவி தவிர்த்தலைக் கூறியது.

வெண்கலை உடுத்திலர் : போர்க்கென் றெழுவார் வெள்ளிய ஆடையை உடுத்தல் மரபு. வெளிராடை அற்றைப் போர் சீருடை போலும். அதனை உடுத்திலர் என்றது.

கொல்வேல் ஏந்திலர் : கொல்லும் வேலையும் ஏந்திலர்.

தடமுரசு ஆர்த்திலர் : போரின் தொடக்கம் அறிவிப்பான் வேண்டி எழுச்சி முரசும் ஆர்த்தலைச் செய்திலர்.

இடம்பொழுது அமைத்திலர் : போர் நடத்தற்குரிய இடத்தையும், பொழுதையும் தேர்ந்து கொண்டிலர் என்பது.

வடம்பிணிப் ...பூண்டிலர் : தம் கால்களில் இட்ட கயிற்று வடங்களை அறுத்துக் கொண்டு, கட்டுத் துறையினின்று வெளியேறும் மதக் களிறுகள் போல், அதர்ந்த நடை கொண்ட கால்களில் வெற்றிக் கழல் பூண்டிலர். படை மறவரல்லாத பள்ளி மாணவராகலான் அணிகள் கைதரப் பெறுதல் இலையாகலின்.

வேததவை : அரசரவை; வேந்தரவை வலித்தது. அரச ஆளுமை அறியாத நிலையினர் என்றது.

யாத்தநூல் : போர் நுணுக்கங்கள் தொகுத்துக் கூறும் நூல். போர்த்திறன் பற்றிய அறியாமை கூறியது

பூத்த...,சிவப்ப : மலர்போலும் இளமை முகம். அம்முகத்து, ஒளியை உமிழ்க்கும் கண்கள். முகத்துக்கண் முத்துப் போலும் வெயர்வைத்துளிகள் சார்ந்த சிவந்த நுதல். இவை மாணவர்தம் இளமை நிலையையும் முயற்சி முனைப்பையுங் குறித்தன என்க.

கொள்கை பொறித்த கொடி : 'தமிழ் வாழ்க' எனும் கொள்கை வரியெழுதிய கொடி.

தோள் தாங்கி : தோள்களிலே சாய்த்துத் தாங்கி.

வெல்கை—ஆகி : தமிழ் வெற்றியையும் இந்தி மொழியின் திணிப்புத் தவிர்ப்பையும் விரும்புவோராகி.

வானர்.. ஆர்த்து : ஒன்று சூழ்ந்து திரண்டு, வானம் அதிரும்படி கொள்கைகளை முழக்கி.

மானம்....இவர் : தமிழ் மானத்தையும்; தமிழர் மானத்தையும் காத்திட இவர் எழுந்தனர்

புனறலை : இளமைத் தலை.

முகமயிர் : முகத்து அரும்ப மீசையும் தாடை அணலும்.

பால் முகம் : குழந்தைமை முகம்.

பசுமையோர் : இளமையோர்.

நூல்முகம் புகூஉம் : பொத்தகத்து முகஞ்செலுத்தும், கல்வி கற்கும்.

செப்புது வெள்ளம் ஒப்போர் : செந்நிறஞ்சான்ற புதிய வெள்ளம் போல் அலைவும் அடர்வும் விரைவும் உடைய இளைஞர் கூட்டம்.

தா புதுக் கொள்கை : 'தமிழே வேண்டும்; இந்தி வேண்டாம்' என்னும் புதுமைக் கொள்கை.

தெருத்தொறும் முழக்கி : தெருத்தொறும் வலஞ்சென்று முழக்கி.

வைகறை—தறுகணேரே : முன் காலை தொடங்கிக் கதிரவன் போக்கொடு தாழும் பகல் முழுதும் நடந்து, நள்ளிரவிலும் கண்மூடாத வீரம் மிக்கவர்.

மண்ணும்....இலையே : பிறரின் ஆட்சி நிலத்தைத் தன் ஆளுமை நிலத்தொடு இணைத்துக் கொள்ளும் ஆசை இவர்களுக்கு இல்லை.

பொன்னும்....இலையே . பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசை யில்லாதவர்.

பொருதும் ....அரும்பிலர் : போராட வேண்டும் எண்ணமும் தோன்றுதவர். இயல்பான எழுச்சி கொண்டாராதலின்.

நுண்கலை : போர்க்குரிய நுண்ணரிய முறைகள்.

கவடும் படையும் : போருக்கான சூழ்ச்சிகளும் கருவிகளும்.

படையும் மலைந்திலர் : தம்மைத் தடுத்து நிறுத்தும் காவலர் படைக்கும் அஞ்சி மயங்கிப் பின் வாங்காதவர்.

இறுதல் : இற்றுப் போதல். தனித் தனியாகப் பிரிந்து போதல்.

விறல் : வெற்றி; **மறல் :** வீரம்.

ஊன் தவிர் நோன்பு : ஊனும் தவிர்த்த கொள்கையுரம்.

உயிர் தீர் முயல்வு : உயிர் தீரும் வரை செய்யப் பெறும் முயற்சி.

காண்குநர் கண்ணீர் கலுழ : இவர்களின் எழுச்சியையும், வீரவுணர்வையும், அதே பொழுது அவர்களின் இளமையையும் கல்வி பயில வந்தார் போராட வேண்டி வந்ததே என்னும் நினைவும், பார்ப்பவர் கண்களில் கண்ணீரை வருவித்தன என்க.

நன்றும் தீதும் நினையாராகி : கல்வியால் ஏற்படும் நன்மையும் இவ்வகைப் போராட்டங்களால் நேரும் தீமையையும் நினைத்துப் பாராதவராகி.

ஒன்றும் நெஞ்சொடு : கருத்து வேறுபாடற்றுப் பொருந்தி ஒரே எண்ணத்தொடு கூடிய நெஞ்சோடு

தொல்லோர் மரபின் அரசர் : பழம் பாண்டிய, சோழ, சேரர் என்னும் மரபில் வந்த அரச வழியினர்.

வல்லோர் அல்லர் : தவம் முதலிய அருந்திறல்களால் வலிமை பொருந்திய துறவிகள் வழியினரும் அல்லர்.

பொருளும்...விழையாராகி : அறவழிகளால் ஈட்டிய பொருளும். அதன்வழி இன்பமும் கூடிய, இருள்தீர்ந்த தூய வாழ்க்கையும் விரும்பாதவர்கள் ஆகி.

அற்றைத் தமிழ்த்தாய் : பன்னெடுங்காலம் முந்தித் தோன்றிய தமிழ் என்னும் தாய்.

இற்றை மகர் : இன்று இக்காலத்துள்ள மக்கள்.

ஒற்றைத் தனி நீள் நினைவு : ஒன்றேயாகித் தனித்து நின்ற நெடிய நினைவாகிய தமிழின் முன்னேற்றம்.

மூவா இளமை....ஏய்ந்த : முதுமை யுருமல் என்றும் இளமைத் தன்மையே சார்ந்த மிகப் பழமையான மொழியாகிய தமிழ் மொழிக்கு வந்து பொருந்திய.

தாவாப் பெருந்துயர் : நீங்காத பேரிடர்.

நெய்யெரி புகுத்திய புகழோர் : நெய்யினுல் தோற்றிக் கொண்ட எரியில் தன் உடலைப் புகுத்திக் கொண்டு மாய்ந்த புகழை உடையவர்.

மெய்யழி பட்ட : உடலம் மாய்த்துக் கொண்ட.

கொடுங்குறை யுறுப்பொடு : உறுப்புகள் குறைந்த கொடுமையான நிலையொடு.

யாங்கன்....வினை : இம் மொழிப் போராட்டத்திற்கென வெழுந்த மாணவர் எழுச்சியை அடக்குவான் வேண்டி, இக் கொடிய அரசு மேற்கொண்ட கடிய நடவடிக்கைகளையும் அவற்றினுல் ஏற்பட்ட தீய விளைவுகளையும் எவ்வாறு உரைப்பல் என்றபடி.

ஈர்ந்தண் உலகம் : குளிர்ந்த தண்ணீர் சூழ்ந்த இந்த உலகம்.

இருள்நீள் விசும்பு : நீண்ட இருள் தோய்ந்து கிடக்கும் இவ் வானம்.

(தொடரும்)

மயிலை சீனி வேங்கடசாமியின் தனித்தமிழ் விருப்பு!

—க. தமிழமல்லன், க. இ.

அறிஞர் பலர் ஆராய அஞ்சிடும் புதிய துறைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டும் கடுமையாக உழைத்தும் நூல்களையாக்கியவர் மயிலை சீனி வேங்கடசாமி ஆவார். அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிகளுள் குறிப்பிடத்தக்கது 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்பதாகும். 'கிறித்தவமும் தமிழும்' 'மறைந்த தமிழ் நூல்கள்', 19-ஆம் நூற்றாண்டில் தமிழிலக்கியம்' போன்ற நூல்கள் அவருடைய ஆராய்ச்சித் திறத்தால் எழுதி வெளியிடப் பெற்ற முதனூல்களாம். பாவேந்தர் போன்றோரின் பாடல்கள் நிகழவிருக்கும் தமிழ்ப் பெரும் புரட்சியின் கூரிய வாள்களெனில் கேடகங்களாக அமைவன மயிலை சீனி வேங்கடசாமி போன்றோரின் ஆராய்ச்சிக் கருவூலங்கள்!

அவர், தாம் இயற்றிய நூல்களை முற்றிலும் தனித்தமிழில் வழங்கவில்லை. எனினும் தனித்தமிழின் தேவையையும் நயன்மையையும் உணர்ந்தவர்; தனித்தமிழை ஆதரித்தவர்; அதைக் கடைப்பிடிக்க முயன்றவர்; தனித்தமிழை எதிர்த்தோரை வன்மையாக எதிர்த்தவர்.

அவருடைய 'கிறித்துவமும் தமிழும்' எனும் நூலின் முதற் பதிப்பு 1936-ஆம் ஆண்டில் வெளிவந்தது. பின்னர் அடுத்தடுத்து மூன்று பதிப்புகள் வெளியாயின. மூன்றாம் பதிப்பை வெளியிட்ட போது முதலிரண்டு பதிப்புகளில் அந்நூலில் இடம் பெற்ற பிற மொழிச் சொற்கள் பலவற்றை நீக்கினார்; அவற்றுக்குப் பகரமாகத் தூய தமிழ்ச் சொற்களைச் சேர்த்தமைத்தார். இதனை அந் நூலின் மூன்றாம் பதிப்பு முன்னுரையிலும் குறிப்பிட்டுள்ளார்.

"முதற்பதிப்புகளில் ஆங்காங்கு இருந்த சில சொற்களை **நீக்கி அவற்றிற்குப் பகரமாகத் தூய தமிழ்ச் சொற்களைச் சேர்த்திருப்பதும்** இரண்டோர் இடங்களில் புதிதாகச் சில செய்திகளைச் சேர்த்திருப்பதும் தவிர அதிகமாக வேறு கருத்துகளை இதில் சேர்க்கவில்லை."

என்னும் அவர்தம் முன்னுரை மிகவும் குறிப்பிடத்தக்கது. தூய தமிழ்ச் சொற்களைச் சேர்ப்பதற்கென்றே மூன்றாம் பதிப்பைப் பயன்படுத்திக்கொண்ட அவர்தம் தனித்தமிழார்வம் போற்றத் தக்கது!

'தனித்தமிழ்க் கொள்கை நடைமுறைக்கு வரமுடியாது. தமிழ் மொழியில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்குவது மொழி

வெறியாகும்' என்றெல்லாம் சிலர் கூறி வருகின்றனர். திரிபா ராய்ச்சியாளர் தெ. பொ. மீ. 'சமற்கிருதச் சேர்க்கையினால் தமிழ் இனிமை பெற்றது' என்றுகூட எழுதத் துணிந்த காலத்தில் தனித் தமிழ் பற்றிச் சீனி வேங்கடசாமி அவர்கள் கொண்டிருந்த கருத்து நமக்கு மிகவும் விருப்பமானதாகும்.

'தமிழில் பிறமொழிச் சொற்கள்' என்பது பற்றிக் கூறவந்த சீ. வே, "அவரவர் தங்கள் மொழியைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் முறையும் ஒழுங்கும் அழகும் ஆகும்." [1] என்று கூறினார். தனித்தமிழ் அன்பர்களை மொழி வெறி யர்கள் என்று கூறியதற்குச் சீ வே. கூறிய விடையே அவரது தனித்தமிழ் ஆர்வத்தைக் காட்டும்.

"தனித்தமிழ், தூய தமிழ் வேண்டும் என்பது வெறி ஆகுமா? இருக்கிற தமிழ்ச் சொற்களைக் களைந்து விட்டு அதற்குப் பகரமாக வேற்று மொழிச் சொற்களை வழங்குவது கூடாது என்பதுதான் தனித்தமிழ், தூய தமிழ் என்று கூறுவதன் கருத்து.

நீர் இருக்க ஜலம் ஏன்? நிலம் இருக்க பூமி ஏன்?
நாள் இருக்க தினம் ஏன்? தாய்தந்தையர் இருக்க
மாதா பிதாக்கள் ஏன்? குழந்தை இருக்க சிசு ஏன்?

இவ்வாறு நூற்றுக்கணக்கான சொற்களைக் காட்டலாம். மொழி வளர்ச்சி என்றால், கண்ட கண்ட குப்பைக் கூளங்களை யெல்லாம் கலந்து விடுவதா? இதுவா மொழி வளர்ச்சி? **தூய தமிழ் வேண்டும என்பவர்களைத் 'தமிழ் வெறியர் என்று கூறு கிறார்கள். வேண்டாதவைகளை யெல்லாம் வேண்டும் என்று கூறும் பைத்தியக்காரர்கள்"** [2]

என்று கூறுகிற அவர் தனித்தமிழின் மாண்பினை உணர்ந்தவர் எனினும் அவர்தம் கொள்கை, 'இன்றியமையாத மிகத் தேவை யானவைகளாக உள்ள வேற்று மொழிச் சொற்கள் தேவை. அதிலும் தமிழ் மரபுக்கேற்றபடி அமைந்த விஞ்ஞானச் சொற்கள் மிக மிகத் தேவை" [3] என்ற வகையிலேயே அமைந்திருந்தது என்பது சிறப் பாகக் குறிப்பிடத்தக்கது!

"விஞ்ஞானக் கலைச் சொற்களை அங்கிருந்தே நாம் பெற்றுக் கொள்வதுதான் அறிவுடைமை" [4] என்னுங் கருத்துக் கொண் டிருந்த சீ. வே. அவர்களிடம் இன்றைய அறிவியல் கலைச் சொற் களைத் தனித்தமிழில் கொண்டு வந்துள்ள நிலைமைகள் தெளிவு படுத்தப்பட்டிருக்குமானால், தனித்தமிழின் நடைமுறைகளைத் தகுந்த

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம்)

1; 2, 3, 4 சமயங்கள் வளர்த்த தமிழ்—மயிலை சீனி வேங்கட சாமி பக். 30, 29, 33.

பெருஞ்சித்திரனார்

பாடல்க்ள் - கனிச்சாறு

சூன் 3, - 1980 "இந்து" நாளிதழின் மதிப்புரை :

PERUNCHITTARANAR PADALGAL — KANI-CHARU, 3 Volumes: Published by auth r, c/o Then Mozhi Min Achagam, M dras-5; Vol. I Rs. 15; Vol. II Rs. 11; Vol. III Rs. 17-50.

The poet's output is marvellous. Each line of his poems has an exquisite grace. But one doubts whether the poet is not sectarian in outlook for he has identified himself with the interests of a particular section of the people. His utterances seem to be the echoes of his inner voice that constantly cries, sorrowing over the disgrace that has befallen the Tamils. He is distressed that the Tamils are victims to tyranny and oppression. He is so much infatuated with the ever fresh, enticing youthfulness of Tamil that he adores her,his admiration for the Tamil culture is so deep that he fails to recognise the merits and excellences of other culture. The first volume is all praise for the greatness of the Tamil language which has an amazingly rich literary heritage, which is perhaps the only living Indian language whose origin is traced to the misty past when saints nurtured it and infused into it a rare sweetness. The poet's love for the Tamil language knows no bounds. Memories of the age when the Tamils occupied an eminent position in the country, when they were hailed as pioneers in many fields crowd his mind. Reflecting over the golden epoch of the Tamils, he painfully cries: 'Alas, how low my brethern have fallen from the great heights of their glory!" Tearfully he beckons them unto him and in a voice choked with emotion commands: "Come, unite and reveal how mighty and great you are".

The poet assumes the role of a moralist in the second volume. His stinging words, his fiery eloquence, his sarcasm, his jeering and jesting remarks make a dent into the hardened selfishness of the people. He chides the greedy that keep to themselves all their wealth passively witnessing their hungry neighbours die of starvation. To the young and the old, to the labourer and the capitalist, to the teacher and the pupil, he has a piece of advice. The poems which expose

the ills of modern civilisation serve as a corrective to the youth of our country. "Let not your mind be beguiled by the tactics of the clever, let not your eyes be deceived by the glamour of the scenes around you", the poet warns.

The third volume opens with romantic poems. The author shows consummate artistry while revealing his tenderest emotions. The poet is sometimes lost in the scenic splendours of Nature. Though a rationalist his conception of divinity has all the spiritual significance a mystic's notion of God has, for, he perceives the work of a Supreme Power in the mystery and awe hidden in the beauty and fragrance of a flower and in the complex mechanism of the human being. What is God? "That which makes life throb, that which speaks in our inner being, that which burns as fire. that which is land, that which is water, that which is knowledge, that which is beyond our comprehension is God", muses the poet. Does not one hear the echo of an eternal philosophic truth uttered by our sages? —R. Sundaresan,

தமிழாக்கம் !

இப் பாவலரின் வெளிப்பாடு வியக்கத் தகுந்ததாக உள்ளது. பாக்களின் ஒவ்வொரு வரியும் மிகச் சிறந்த நயம் கொண்டதாக இருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு மக்கள் பிரிவின் நலன் கருதுகின்றவர் என்பதைத் தாமே அடையாளங் காட்டியுள்ளமையால், தம் வெளிப்பாடுகளால் இவர் "ஒரு குறுகிய மக்களினப் பற்றுளர் அல்லர்" என்பதில் ஒருவர்க்கு ஐயந் தோன்றுவதற்கு வழியுண்டாகிறது.

தமிழர் வீழ்ச்சியுற்றுக் கிடக்கின்ற அவ்விழிவான நிலைக்காகப் பெரிதும் வருத்தமுற்று, அவர் இடைவிடாது அரற்றுகின்ற உள்ளத்து ஓசைகளின் எதிரொலிகளாகவே அவரின் கருத்துரைகள் தோற்றமளிக்கின்றன. "கடுமையான உழைப்புக்கும், நசுக்கத் திற்கும் தமிழர்கள் பலியாகின்றனர்!" என்று, அவர் கடுந்துயர் கொள்கின்றார். வேற்றைய பண்பாடுகளின் தகுதிகளையும் சிறப்புகளையும் உணர்ந்து கொள்ளத் தவறி, 'தமிழப் பண்பாடு மிகவும் ஆழமுடையது' என்று பாராட்டுகின்றார்; 'எக்காலத்தும் புதிய, இளமைக் கவின் வாய்ந்த தமிழ்மொழி' என்று புகழாரம் சூட்டும் அவர், அதன்பால் மிகவும் மயக்கமுற்றவராக இருக்கின்றார்.

முனிவர்கள் வலிவூட்டி வளர்த்து, அரிய இன்சுவையைக் கலந்தளித்த-அந்தத் தெளிவில்லாத கடந்த காலத்திலேயே தோற்றம்

தொடங்கிய ஒரே இந்திய வாழ்மொழியும், பெருவியப்புக்குரிய இலக்கிய மரபுச் செல்வம் கொண்டதுமான தமிழ்மொழியின் பெருந்தகைமையைப் பராவுவதாகவே முதன் மடலம் முழுமையும் அமைந்துள்ளது.

தமிழ்மொழியின்பால் பாவலருக்குள்ள காதல் எல்லையற்றதாக விளங்குகின்றது. பல துறைகளிலும் முனைவர்கள் எனத் தமிழர்கள் புகழப்பெற்ற மிக வுயரிய மேன்மை நிலையை அவர்கள் கைப்பற்றிய, அப்பழங்காலத்தைய நினைவுகள் அவரின் அறிவைச் சூழ்கின்றன. தமிழர்களின் பொற்காலத்தின் நிலைகளை மீண்டுமெண்ணி, "பெரும் புகழின் மிகப் பெரிய உச்சியினின்று என் உடன் பிறப்புகள் இவ்வளவு தாழ வீழ்ச்சியுற்றனரே, அந்தோ!" என்று கதறி அழுகின்றார்.

நீர் சுமந்த கண்களொடு அவர்களைச் சைகை செய்து தம்மிடம் அழைத்து, உணர்ச்சிப் பெருக்கீட்டால் தொண்டையடைத்த ஒலியில் கட்டளையிடுகின்றார்: 'வாருங்கள்! ஒன்றுபடுங்கள்! நீங்கள் எவ்வளவு பெருமையானவர்கள் என்பதையும் எவ்வளவு மதுகை நிறைந்தவர்கள் என்பதையும் வெளிப்படுத்துங்கள்."

இரண்டாம் மடலத்தில், ஒரு நல்லொழுக்க ஆசிரியனாக நிற்கிறார் இப்பாவலர். கொடுக்கால் கொட்டுவது போலும் சொற்களாலும், அனல் கக்கிப் புறம் வரும் ஆற்றொழுக்கு நடையாலும், நயமான ஏளனத்தாலும் இகழ்ச்சி மற்றும் பகடியுரைகளாலும் அவர் குத்திக் குறிப்பிடுவன யாவும் மக்களின் கொடிய தன்னல வுணர்ச்சிகளைத் தகர்ப்பனவாக விளங்குகின்றன. அண்டையிலுள்ளாரை வறுமையால் இறந்து போகப் பசியோடு விட்டு விட்டுத், தம் செல்வத்தைத் தம்மிடத்தேயே பூட்டிக் காத்துக் கொள்ளுவோரின் பேராசைகளை மிகவும் கடிகின்றார்.

இளைஞர்க்கும் முதியோர்க்கும், தொழிலாளிக்கும் முதலாளிக்கும் ஆசிரியர்க்கும் மாணவர்க்குமான அறிவுரைப் பகுதியை அவர் வழங்குகின்றார். நம் நாட்டு இளைஞர்களைத் தவறில்லா நடத்தையுள்ளவராகச் செய்வதற்கு, இக்கால நாகரிக நோய்களைப் பற்றி வெளிப்படுத்தி அப் பாக்கள் தொண்டாற்றுகின்றன. "நயமான சூழ்ச்சிகளுக்கு உன் அறிவு மயக்கமுற வேண்டா; உன்னைச் சுற்றிய காட்சிகளின் பகட்டுகளில் கண்கள் ஏமாறிப்போம்படி விட்டு விட வேண்டா" என்று பாவலர் எச்சரிக்கை செய்கின்றார்.

மூன்றும் மடலம் காதல் தொடர்பான பாக்களுடன் தொடங்குகின்றது. இளகிய உள எழுச்சிகளை வெளிப்படுத்துகின்ற பொழுது, ஆசிரியர் அவர்கள் முழு நிறைவான கலை நயத்தைக் காட்டி நிற்

கின்றார். சில பொழுதுகளில், இயற்கையின் பேரொளிக் காட்சிகளி டையே இப்பாவலர் தம்மையே இழந்து விடுகின்றார்.

தாம் ஒரு பகுத்தறிவாளராக இருந்துங்கூட, அவரின் இறை யியல் கருதுகோளானது, இறைமையின் மறைமெய்ம்ம எண்ணங் களின் தெய்விகக் குறியீடுகளைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. மாந்தவுயிர்களிடம் பின்னிப் பிணைந்துள்ள எந்திர வியக்க நுட்பங் களிலும், மலரின் அழகு மணம் ஆகியவற்றிலும் வியப்புகளாக மறைந்துள்ள, புதிராகிய பெரும் பேராற்றலின் இயக்கங்களையும் இப்பாவலர் உணர்ந்து காண்கின்றார். இறைமை என்பது என்ன?

‘ஊனுயிரை உந்துவதும் உள்ளத்தே பேசுவதும்
வான்வளிதீ நீர்நிலமாய் வாய்ந்ததுவும்—மேன்மேற்
புதிராய் அறிவாய்ப் பொருள்களுமாய் நிற்ப
தெதுவோ அதுவே இறை”

—என வியக்கின்றார் பாவலர்.

(இதில்) நம் முனிவர்களால் மொழியப் பெற்ற, எக்காலத்தும் நிலையாகிய மெய்ம்மவுண்மைகளின் எதிரொலி ஒருவர்க்குக் கேட்கின்றதில்லையா? —பெயர்ப்பு: **தமிழூர் ப. அருளி.**

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினும், அறிவூட்டும் பணியைத் தென்மொழி முதன்மையாய் மேற் கொள்ள வேண்டும்.

தங்கள் உள்ளம் உவக்க வேண்டும் என்பதையே கருதிப் பேசுப வர்களை—எழுதுபவர்களை அப்பால் ஒதுக்கிவிட்டுத் தென்மொழி நலனில் ஆர்வம் கொண்டோரை—அவர் உங்கள் பகைவராயினும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என விரும்புகிறோம். அன்புடன்,

—**இரணியன்**, நாரணவலசு.

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் அவரது கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தால், தனித் தமிழ் பற்றி அவர் கருத்தறிவிக்க நேர்ந்திருந்தால், கட்டாயம் தமது கருத்துகளை மாற்றிக் கொண்டிருப்பார். முழுமையான தனித்தமிழே தேவை என்று கூறியிருப்பார்.

சீனி வேங்கடசாமி போன்ற அறிஞர் பலருக்கு இன்றும் தனித் தமிழியக்கத்தின் வளர்ச்சி சரிவர விளங்க வைக்கப்படாமலே இருக் கிறது! இத்தகையோர்க்குத் தெளிவான தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்புகளைத் தனித்தமிழன்பர்கள் விரைந்து செய்ய வேண்டும். அது, தனித்தமிழ் வளர்ச்சியைத் தூண்டும். 0

தமிழப் பேரரசு!

—சி. பா. ஆதித்தனார்.

8. தில்லிக்குத் திறை

தமிழ்நாட்டில் உள்ள மக்கள், வறுமையினால் படும் துயரம், சொல்லுக்கு அடக்காது. தமிழ்நாட்டைப் பிடுங்கித் தின்னுகிற தில்லியாருடைய நெஞ்சைத் தவிர, மற்ற எல்லோருடைய நெஞ்சையும் கரைக்கக்கூடிய ஏழ்மையை நம் மக்கள் அடைந்து விட்டார்கள்!

தமிழ்நாட்டின் செல்வம், தமிழ்நாட்டை வளப்படுத்தப் பயன் படாமல் பிறர் கையில் சிக்கித், தமிழ்நாட்டை விட்டு வெளியே போவதுதான் இந்த ஏழ்மைக்கு முகாமைக் காரணம்.

சுரண்டப்படுகிற நாடு

14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடநாட்டு நவாப் மாலிக் கபூர், தமிழ்நாட்டுக்குள் புகுந்து, யானைகளையும் குதிரைகளையும், தங்கத்தையும், முத்தையும் வேறு விலை உயர்ந்த பொருட்களையும் அள்ளிக்கொண்டு சென்றான் என்ற வரலாற்றை முன்பே பார்த்தோம். அன்று தொடங்கி, இன்றுவரை, தமிழ்நாடு 600 ஆண்டுகளாகச் சுரண்டப்படுகிற நாடாகவே ("காலனி நாடாக") இருக்கிறது. **மாலிக் கபூரைத் தொடர்ந்து, மலையாள அரசன் வீரகேரளனும், ஆந்திர தேசத்து விசயநகர மன்னர்களும், உருது நவாபுகளும், ஆங்கிலேயர்களும், இன்று தில்லிக்காரர்களும் தமிழ்நாட்டை ஒருவர்பின் ஒருவராகச் சூறையாடியதன் காரணமாக, தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம் தாழ்ந்து, நம் மக்கள் சொல்லொணாத் துயரத்தை அடைந்துள்ளார்கள்.**

தில்லியார் கொண்டு போனது

மாலிக் கபூர் வாரிச்சென்ற செல்வத்தைப்போல், தில்லியார் தமிழ்நாட்டில் இருந்து 100 மடங்கு அதிகமாகத் தமிழ் மக்களின் உழைப்பையும், பொருளையும் இன்று சுரண்டிச் செல்கிறார்கள். ஆங்கிலேயர்களின் வல்லாண்மை ஒழிந்த பிறகு, கடந்த 11 ஆண்டுகளில் 800 கோடி உருபா வரை தமிழ்நாட்டில் இருந்து தில்லியார் சுரண்டி யிருக்கிறார்கள். (இது 1958 வரை உள்ள கணக்கு) சுரண்டப்பட்ட தொகை பற்றிய விவரம் பின்வருமாறு:—

தில்லிக்குத் திறை

தில்லி அரசு, வரி என்ற பெயரில் தமிழ்நாட்டில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு உரு. 50 கோடி அள்ளிக்கொண்டு போகிறார்க

தமிழ்நாட்டில் வாழுகிற மக்கள் மீது தீப்பெட்டி வரி, எண்ணெய் வரி; துணி வரி, சர்க்கரை வரி, ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, இறப்பு வரி என்ற பலதரப்பட்ட வரிகளின் மூலம் தில்லி அரசு உரு. 66 கோடி தண்டல் செய்கிறார்கள்.

இந்தப் பணத்தைத் திரட்டுவதற்காக ஏற்படுகிற செலவையும், திருப்பிக் கொடுக்கிற "உதவிப் பணத்தை"யும் உரு. 16 கோடி என்று வைத்துக்கொண்டால் கூட, "நிகர ஊதியமாக"த் தில்லிக்கு, ஒரு ஆண்டில் உரு. 50 கோடி போகிறது. இந்தப் பணத்தைத் தமிழ்நாட்டு மக்கள் கொடுக்கிறார்கள்!

இவ்வாறு போகிற பணத்துக்குத் "திறை" (கப்பம்) என்ற பெயர்தான் பொருந்தும்! தில்லி தண்டுகிற வரிப் பணம், தமிழ்நாட்டில் செலவாகாமல் தில்லிக்குப் போவதால், தில்லி அரசு விதிக்கிற வரி "திறை வரி" என்ற தன்மையை உடையதாக இருக்கிறது! கடந்த 11 ஆண்டுகளுடைய கணக்கை எடுத்துப் பார்த்தால், இந்தத் "திறை வரிக"ளின் மூலம் தில்லி அரசு "நிகர ஊதியமாக"க் கொண்டு போன தொகை உரு. 550 கோடி ஆகிறது!

பணத்தாள்கள் அச்சடிப்பு

அது மட்டும் அன்று! உருபாத் தாள்களை அச்சடித்து, அதன் மூலம் தமிழ்நாட்டில் இருந்து, தமிழ் மக்களின் உழைப்பையும், பொருள்களையும் சுரண்டுகிறது தில்லி அரசு!

எப்படி என்றால், பத்து உருபாத் தாள் ஒன்றை எடுத்துப் பாருங்கள். அது ஒரு காசு (நயா பைசா) மதிப்புள்ள வெறும் தாளில் அச்சடிக்கப்பட்டு இருக்கிறது. பணத்தாள் அச்சடிக்கிற உரிமை தில்லி அரசிடம் மட்டும் இருக்கிறது. அவர்கள், வெறும் தாளில் "10 உருபா" அல்லது "100 உருபா" என்று அச்சடித்துப் புழக்கத்துக்கு விடுகிறார்கள்.

உரு. 135 கோடி ஊதியம்

கடந்த 11 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உரு. 135 கோடிக்குத் தில்லி அரசினரின் பணத்தாள்கள் செலாவணிக்கு விடப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்நாட்டில் இருந்து 135 கோடி உருபா பெறுமான உழைப்பையும் சரக்குகளையும் தில்லி அரசினர் சுரண்டிக் கொண்டு போய் இருக்கிறார்கள்! இந்த 135 கோடி உருபா தமிழ்நாட்டைச் சேரவேண்டியது அல்லவா?

தில்லியின் "வாணிபம்"

இது தவிர, தில்லி அரசு நடத்துகிற வாணிபக் குழுமங்களாகிய வாழ்நாள் காப்பீடு, அரசு வாணிக நிலையம், சிந்திரி உர

உருவாக்கத் தொழிற்சாலை, இரும்புத் தொழிற்சாலைகள் ஆகிய தொழில்களில், கிடைத்த "ஊதியத்தில்" தமிழ்நாட்டுக்குத் தரப்பட வேண்டிய பங்கு உரு. 75 கோடி.

இந்த ஊதியத்தையெல்லாம் தில்லி அரசு கைப்பற்றியதே ஒழிய, அதில் ஒரு சிறிதுகூட தமிழ்நாட்டுக்கோ, தமிழ் மக்களுக்கோ கொடுக்கவில்லை.

மேற்படி வாணிகக் குழுமங்களில் முதலீடு செயயப்பட்ட பணத்தில், தமிழ்நாட்டில் இருந்து திரட்டப்பட்ட முதலீடும் இருக்கிறது. ஆகையால், தமிழ்நாட்டவர்களுக்கு அதில் பங்கு உண்டு.

வெளிநாடு கொடுத்தது

வெளிநாடுகளில் தில்லி அரசு வாங்கிய "உதவித் தொகை" முழுவதையும் வடநாட்டில் செலவு செய்கிறார்களே ஒழிய, அதில் தமிழ்நாட்டுக்கு உரிய முறையான பங்கு நமக்குக் கொடுக்கப்படவில்லை. வெளிநாட்டவர்கள் கொடுத்த உதவி, தமிழ்நாட்டுக்கும் சேர்த்துக் கொடுக்கப்பட்டது; வடவருக்கு மட்டும் என்று கொடுக்கப்பட்டது அன்று! அப்படி இருந்தும், தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டது. ஆகவே தமிழ்நாட்டவர் அதில் பங்கு கேட்பது முறைப்படியான கோரிக்கை. இந்த வகையில் உரு. 50 கோடி தில்லி அரசு கொடுக்க வேண்டும்.

கணக்குத் தீர்க்கும் நாள்

ஆகவே, கடந்த 11 ஆண்டுக் கணக்கைத் தீர்த்துக் கொள்வதாக இருந்தால், இன்று தில்லியார் தமிழ்நாட்டுக்கு (1958 வரை) உரு. 900 கோடிக்கும் அதிகமாகக் கொடுக்க வேண்டும். நாள் செல்லச் செல்ல இந்தத் தொகை உயர்ந்து கொண்டே போகும். ஆண்டு தோறும் தமிழ்நாட்டில் இருந்து உரு. 100 கோடி சுரண்டிக் கொண்டே இருப்பார்கள். தமிழ்நாடும் மேலும் மேலும் வறுமை அடைந்து, மக்களின் வாழ்க்கைத்தரம் மேலும் பாழ்படும்!

தில்லி வல்லாண்மையில் இருந்து விடுபட்டு, தமிழ்நாடு தன்னுரிமை (விடுதலை) அடைந்தால்தான், இத்தச் 'சுரண்டல்' நிற்கும். தமிழ்நாட்டில், தமிழர்கள் செய்த பொருள்களை, (தமிழர்களின் கடையில் விற்பனை ஆகிற பொருள்களை) வாங்கி ஆதரிப்

தில்லியார், தமிழ்நாட்டுக்குக் கடன்பட்டுக் கிடக்கிற தொகையைக் "கொடு" என்று கேட்டு வாங்காமல்; சென்னை அரசின் அமைச்சர்கள், தில்லியிடம் போய், 'உதவி" என்று கை ஏந்துவது, தமிழ் மக்களின் பண்பாட்டுக்கு முற்றிலும் புறம்பானது.

"ஆவிற்கு நீர் என்று இருப்பினும், நாவிற்கு
இரவின் இழி வந்தது இல்!" —திருக்குறள்

பதன் மூலம், இந்தச் சுரண்டல் ஓரளவுக்குக் குறையும் என்று சொல்லலாம். ஆனால் சுரண்டல் முழுவதும் நிறுத்துவதற்கு, தமிழ் நாடு தன்னுரிமை (விடுதலை) அடைவதைத் தவிர வேறு வழி இல்லை.

திரும்பப் பெறுதல்

தில்லியார் கொடுக்க வேண்டிய பணத்தைத் திரும்பக் கேட்டு வாங்குவதாயிருந்தால், தமிழ்நாட்டில் மாவட்டம் ஒன்றுக்கு உரு. 80 கோடி மேனி (அதாவது ஒரு வட்டத்துக்கு உரு. 8 கோடி மேனி) செலவிட்டு, பெரிய பெரிய தொழிற்சாலைகளைக் கட்டி, எல்லா மக்களுக்கும் நல்ல ஊதியத்தில் வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும்.

தில்லியாரின் கணக்கைத் தீர்க்கும் நாள் வந்தே தீரும். இந்தக் கணக்கு எவ்வளவு விரைவில் தீர்க்கப்படுகிறதோ, அவ்வளவு நல்லது, தில்லி அரசினருக்கு! 1958-ஆம் ஆண்டில் கணக்கை முடித்தால், தில்லியார் தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய தொகை உரு. 900 கோடிதான். ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல, ஆண்டுக்கு உரு. 100 கோடி மேனி அதிகம் அவர்கள் கொடுக்க நேரிடும்!

4. வறுமை போக்கும் மருந்து!

ஒரு தமிழனுடைய சராசரி வரும்படி, மாதத்துக்கு உரு. 20 என்று கணக்கிடப்பட்டு உள்ளது. இதைக் கொண்டு அவன் உண்பது எப்படி? உடுப்பது எப்படி? நோய் வந்தால், மருந்து வாங்குவது எப்படி? முதுமைக் காலத்துக்குச் சேமித்துவைப்பது எப்படி? வேலையே கிடைக்காமல் 100-க்கு 50 பேர் அலைகிறார்கள், அவர்கள் என்ன செய்வார்கள்?

கடந்த 11 ஆண்டுகளில், அஃதாவது தில்லிக்காரர்கள் கையில் ஆட்சி வந்த பிறகு, தமிழ்நாட்டின் வறுமை மேலும் அதிகப்பட்டு இருக்கிறது. கைந்நூலை (கதரை)ப் பெருக்கியதால் வறுமை தீர்ந்தபாடில்லை!

2500 பேர் தற்கொலை

ஆண்டுதோறும் தமிழ்நாட்டில் 2500 பேர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்றால், அதற்கு முகாமையான காரணம் வறுமையே!

இந்திய நாட்டைப் போல் 3 மடங்கு நிலப்பரப்பு உள்ள ஆத்திரேலியாக் கண்டத்தில், ஒரு கோடி மக்களே வாழுகிறார்கள். இந்தியாவில் இருப்பவர்கள் 36 கோடிப் பேர்கள். தில்லி அரசுக்கு வெளி நாடுகளில் சாய்கால் இருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படியானால், ஆத்திரேலியாக் கண்டத்தில் போய்க் குடியேறுவ தற்கு ஏன் துணிச்சல் இல்லை?

வறுமைக்கு மருந்து, தொழிற்சாலைகள்! வேலையில்லாத எல்லோருக்கும் வேலை கொடுக்கக்கூடிய புதிய தொழிற்சாலைகளை, ஊசி முதல் கப்பல் வரை செய்யக்கூடிய தொழிற்சாலைகளை, தமிழ் நாட்டில் அமைத்து, 400 இலக்கம் தமிழ் மக்களின் குழந்தைகள் நீங்கலாக மற்ற எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியும்.

செருப்புக்குத் தகுந்தபடி கால்!

எல்லோருக்கும் வேலை கொடுப்பது முடியாத வேலை என்றும், ஆகவே, குழந்தைகள் பெறுவதைக் குறைக்க வேண்டும் என்றும் தில்லி அரசு கூறுவது பெரிய தவறு. எல்லாச் செல்வத்தையும் விட, மக்கட் செல்வம்தான் சிறந்தது. ஆகையால், மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கக் "கருப்பத் தடை" செய்யச் சொல்வது, நாடு தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று கூறுவதற்கு ஒப்பாகும்.

எந்திரம்

எந்திரங்களைக் குறைத்து, கை உழைப்பை அதிகப்படுத்த வேண்டும் என்பது வடநாட்டவர்களுடைய பண்பாடு. ஆனால் அது தமிழர்களின் பண்பாடு அன்று.

பண்டையத் தமிழ் இலக்கியங்களில், பல்வேறு எந்திரங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. சீவகசிந்தாமணியில் சொல்லப் பட்டு இருக்கிற "மயில் பொறி" ஓர் எந்திரமே தவிர, வேறில்லை.

இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த "இமய வரம்பன்" நெடுஞ்சேரலாதன் ஆட்சியின் கீழ், தமிழ்நாட்டின் செழிப்பு "தீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த" என்று வண்ணிக்கப் பட்டு உள்ளது.o

---

oதீம்பிழி எந்திரம் பத்தல் வருந்த
இன்றே அன்றே தொன்றோர் காலை
நல்லமன் அளிய தாமெனச் சொல்லிக்
காணுநர் கைபுடைத்து இரங்க
மாணா மாட்சிய மாண்டன பலவே. (பதிற்று; 16)

மிளையும், கிடங்கும், வளைவிற் பொறியும்,
கருவிரல் ஊகமும், கல்லுமிழ் கவணும்,
பரிவுறு வெந்நெயும், பாகடு குழிசியும்,
காப்பொன் உலையும், கல்லிடு கூடையும்,
. . . .
. . . .
கோலும், குந்தமும், வேலும் பிறவும்
ஞாயிறு சிறந்து நாட்கொழு நுடங்கும்வாயில்
(சிலம்பு 15; 207-18)

கழகக் காலப் பாண்டியர் தலைநகரில், மதில்மீது அரிய பொறிகள் பல அமைக்கப்பட்டு இருந்ததாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. வளைந்து, தானே எய்யும் வில், இரும்பு உருக்கும் உலைகள், பகைவரின் உடலைக் கிழிக்கும் "பன்றிப் பொறி" இவை போன்ற 20 வகை எந்திரங்கள் பயன்பட்டதாகக் கூறப்பட்டு இருக்கிறது.

ஆலைக் கூட்டம்

ஆகவே, தமிழ்நாட்டில் உள்ள இயற்கை வளத்தைப் பயன்படுத்தி, எல்லா மக்களுக்கும் உயர்வான ஊதியத்தில் வேலை கிடைக்கக்கூடிய தொழிற்சாலைகளைக் கட்டி, அதில் எந்திரங்களைப் பொருத்தி, அவற்றை ஓட்டுவதன் மூலம் தமிழ்நாட்டின் வளத்தைப் பெருக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் ஏராளமாக 'இரும்பு', 'அலுமினியம்', 'மாக்னசைட்', பழுப்பு நிலக்கரி, சுண்ணும்புக் கல், வெள்ளைக் களிமண் முதலிய மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு பல தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் இரும்பு ஏராளமாக நிலத்தில் இருந்த போதிலும், பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. இந்த இரும்பைப் பயன்படுத்திக் கடிகாரம், மிதிவண்டி, இன்னியங்கி, எந்திரங்கள் முதலியவை செய்யும் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டும். இதனுல் இலக்கக்கணக்கான தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாகும்.

தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் கனிப்பொருள்கள் இருக்கின்றன என்பது ஆராய்ச்சி செய்யப்படவில்லை. ஆகையால், "நில அகழ்வு" அதிகாரிகளுக்கு அவற்றைப் பற்றித் தெரியாமல் இருக்கலாம். ஆனுல் மக்களுக்கு இதுபற்றி ஓரளவுக்குத் தெரியும். எந்தெந்த இடத்தில் என்னென்ன கனிப்பொருள் இருக்கிறது என்பதை, அந்தந்த இடத்து மக்கள் தெரிந்து இருக்கிருர்கள். ஆகவே, அந்தக் கனிப்பொருள்களை எடுத்துத் தொழிற்சாலைகள் அமைக்க மக்கள் ஒத்துழைப்புடன் திட்டம் தீட்டினுல், வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

1944-ஆம் ஆண்டு சென்னையில் நடந்த தமிழரசு மன்ற மாநாட்டில், "தமிழ்நாட்டில் எல்லா மக்களுக்கும் வேலை கொடுக்க தொழில் திட்டம் வகுக்கவேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துறைமுகங்கள் :

மேலும், தமிழ்நாட்டுக்கு நீளமான கடற்கரை இருப்பதால், தமிழ் மக்கள் **பண்டைக் காலத்தைப் போல் மீண்டும் கப்பல் தொழிலில்** ஈடுபடவேண்டும். அதற்கு ஏற்ற வாய்ப்புகள் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் பழைய காலத்தில் துறைமுகமாக இருந்த கொற்கையிலும், தூத்துக்குடியிலும், முகவை மாவட்டத்தில் கீழ்க்கரையிலும் தொண்டியிலும்;

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிராம்பட்டினம், கோடிக்கரை, நாகப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம் முதலிய இடங்களிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூர், பரங்கிப்பேட்டை, மரக்காணம் முதலிய இடங்களிலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் சதுரங்கப் பட்டினம், பழவேற்காடு முதலிய இடங்களிலும், மற்றும் காரைக் கால், புதுச்சேரி ஆகிய இடங்களிலும் பெரிய துறைமுகங்களையும், கப்பல் கட்டும் தளங்களையும் ஏற்படுத்த வேண்டும். இதனுல் பல்லா யிரக்கணக்கான தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

உப்போ, உப்பு !

தமிழ்நாட்டுக்கு இயற்கையாகக் கடலும் சூரிய வெப்பமும் இருக்கிறபடியால், இங்கே கடல் உப்பு விளைவதைப்போல் வேறு எங்கும் விளைவது இல்லை. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு இந்த உப்பை ஏற்றுமதி செய்வதன் மூலம், கடல் வாணிபத்தைப் பெருக்கலாம். மேலும், கடல் உப்பு முகாமையான இயைபியல் (இரசாயனப்) பொருளாக இருப்பதாலும், அது சூரிய வெப்பத்தின் காரணமாகத் தானுகத் தமிழ்நாட்டில் விளைகிறபடியாலும், அதைக் கொண்டு, காலக (சோடா) உப்பு, 'பைகார்ப்பனேட்', சலவை உப்பு முதலியவற்றை உண்டாக்கம் செய்யலாம்.

கடல் முத்து

தமிழ்நாட்டுக் கடலில் முத்து இயற்கையாக விளைகிறது. கொற்கைப் பாண்டியன் காலத்தில் கொற்கையில் முத்து விளைந்த தாக வரலாறு கூறுகிறது. ஆகவே, இக்காலத்துக்கு ஏற்ப, செயற்கை முத்து உண்டாக்குகிற தொழிலை ஏற்படுத்தி, சப்பானில் ஒன்றரை இலக்கம் பேர் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதுபோல, இங்கும் பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் இயற்கை வளத்தைப் பயன்படுத்தித் தொழிற் சாலைகளை அமைப்பதாயிருந்தால், தமிழ்நாட்டுத் தொழிலாளர்களுக்கு, மேல்நாட்டுத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதை விட அதிக ஊதியம் கொடுக்க முடியும். சொந்த இயங்கி இல்லாத தொழி லாளியே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலைமையை ஏற்படுத்தவும் முடியும். (தொடரும்)

மிகவும் வருந்துகிறோம்

1. தமிழீழ விடுதலைக் கூட்டணியின் விடுதலை மறத்தி திருவாட்டி ஊர்மிளா கந்தையா மறைவு:

தமிழீழ விடுதலைக் கூட்டணி மகளிர் பேரவையின் கொழும்புக் கிளைச் செயலாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைத் துணைத் தலைவரும் ஆகிய திருவாட்டி **ஊர்மிளா கந்தையா**

அவர்கள் அண்மையில் 19-5-80 இல் இலங்கை வவுனியாவில் திடுமெனக் காலமானுர் என்னும் செய்தியை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். 36 அகவை ஆகும் இவர், தமிழீழ விடுதலையில் மிகவும் ஆர்வமும் போராட்ட உணர்வும் கொண்ட வீரமகளிர் ஆவர். 1977-ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பொழுது, கொழும்பு ஏதிலியர் தங்குமிடங்களில் அடைக்கலமடைந்த தமிழ் மக்களுக்குப் பசி, பட்டினி கருதாமல் இரவு பகல் பாராமல் கண் துஞ்சாது அரும் பணியாற்றியவர் இவர். தமிழ் ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத் தொண்டர்களில் ஒருவராகவும் இருந்து பெருந்தொண்டு செய்துள்ளார். கூரிய நுண்ணறிவும், விடா முயற்சியும், கொள்கையுரனும், மிக்க துணிவும், விடுதலை வேட்கையும், தமிழின மறுமலர்ச்சிக்காகத் தம் வாழ்வு நலன்களையே ஈகம் செய்து கொண்ட பொதுமை நோக்கும் கொண்ட **ஊர்மிளையின்** அரிய தொண்டு, தமிழீழ விடுதலை வரலாற்றின் மறவர் பட்டியலில் தலையாய இடம் பெற வேண்டிய பெருமை பெற்றதாகும். தென்மொழியின் தொண்டிலும், தென்மொழிக் குடும்பத்திலும் மிக்க ஈடுபாடும் அன்பும் மதிப்பும் கொண்ட இவர் மறைவால் தென்மொழியும் தென்மொழிக் குடும்பமும் பெருந்துயருற்றன. இவர் மறைவு தமிழீழ விடுதலை முயற்சிக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இவர் புகழ் நீடு வாழ்க!

2. இலண்டன் திருவாட்டி அரங்க முருகையன் மறைவு:

'இலண்டன் முரசு' துணையாசிரியரும், இங்கிலாந்திலிருக்கும் தூய தமிழ் உணர்வாளர்களிலும் பரப்புநரிலும் ஒருவரும், அரிய தமிழினத் தொண்டரும், நெடுநாளைய தென்மொழி அன்பரும்

யாருமில்லை; இவர்கள்தாம்

—பாவண்ணன், அறி. இ.

வல்லுணர்வால் உளப்பண்பால் வாழ்வொழுங்கால் அந்நாள்
வண்டமிழர் முயற்சியினுல் புகழோடு வாழ்ந்த
சொல்லுணர்வு சான்றநறுந் தமிழே,நீ இன்று
தூய்மையினை இழந்ததற்குக் கரணியம்யார் என்ருல்
நல்லுணர்வைத் தரும்நூலில் நாட்டமெதும் இன்றி
நல்லதமிழ் பேசலிலும் நனியார்வம் இன்றிப்
புல்லுணர்வை ஊட்டுகின்ற அரசியலார் பொய்க்குப்
புனிதமெனப் புலங்கொடுக்கும் உன்மக்கள் தாமே!

சீர்த்தொண்டால் அந்நாளில் செந்தமிழர் சேர்ந்து
சிறப்பேற்றி உலகமெனும் அரங்கத்தில் சேர்த்த
மூத்ததமிழ் மொழியே,நீ முதன்மைநிலை அற்று
மொய்ம்பிழந்த இழிநிலைக்குக் கரணியம்யார் என்ருல்
ஊர்த்தொண்டு தமிழ்த்தொண்டென்(று) உரைவீரம் சாற்றி
உணர்வுதரா வகையினிலே ஒதுங்கிப்பின் செல்வோர்க்(கு)
ஆர்த்தெழும்பி அலைந்தோடி ஆயிரம்பேர் கூட்டி
ஆரவாரம் செய்கின்ற உன்மக்கள் தாமே!

வையமெலாம் உணர்ந்தேத்த வண்டமிழர் அந்நாள்
வளங்கூட்டித் திறமூட்டி வாழ்வூட்டி வைத்த
மெய்யறிவுத் தமிழே,நீ மேன்மைநிலை கெட்டு
மீட்சியின்றித் தாழ்ந்ததற்குக் கரணியம்யார் என்ருல்
மெய்யறிவில் ஊரரின் புலங்கவிழப் பேசி
போலிமையை வளர்க்கின்ற அரசியலார் பக்கம்
நொய்யவிழ்ந்த முடிச்சருகே கோழிகளைப் போல
நுண்ணுணர்வை இழந்தலையும் உன்மக்கள் தாமே!

ஆகிய திரு. **அரங்க முருகையன்** அவர்களின் அன்புத் துணைவியார் தேவி என்றழைக்கப் பெறும் திருவாட்டி **துர்க்கா தேவி** அவர்கள் (35 அகவை) கடந்த 29-2-80-இல் எதிர்பாராமல் சமையலறையில் நேர்ந்த தீப்பற்றலில் உயிர் துறந்தார்கள் என்னும் செய்தி கேட்டு மிகவும் துயருற்ருேம். பெண்மை நலமும், தாய்மையுணர்வும், நற்பண்பும், தமிழீழம், மலையா, சிங்கை, பிசி முதலிய பல்வேறு நாடுகளிலிருந்தும் அங்கு வரும் தமிழ்த் தொண்டர்களையெல்லாம் தம் கணவருடனிருந்து அன்புடன் வரவேற்று, விருந்தோம்பி மகிழும், மகிழ்விக்கும் இனிய அன்புணர்வும் கொண்ட தம் துணைவியார் பிரிவால் துயருற்றேங்கும் திரு **அரங்க முருகையன்** அவர்களுக்கும், **இளங்கோ, குலோத்துங்கன், அறிவுடை நம்பி** ஆகிய மூன்று நன்மக்கட்கும், அவர்கள் குடும்பத்தினர்க்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் கூறிக் கொள்கிறது.

அசாம் நெருக்கடி

இந்தியாவின் வடகிழக்கெல்லையாக அமைந்தது அசாம் மாநிலம். 79000 ச. கி. மீ. பரப்பளவுள்ள இம் மாநிலத்தில் 192 இலக்கம் பேர் வாழ்கின்றனர்.

இன்று அசாமில் நிகழ்ந்து வரும் போராட்டம் அசாமிய இனம், மொழி, பண்பாட்டுச் சீர்குலைவுகளுக்கு எதிரான ஒன்றாகும். 1837-ஆம் ஆண்டிலிருந்தே தங்களின் தனித்தன்மைகளைக் காக்கப் போராடி வருகின்றனர். 1947-இல் அசாமியர் இனம் ஒரு தேசிய இனமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. 1960-இல் அசாமி ஆட்சிமொழி யாக்கப் பெற்றது. 1972-இல் கல்லூரிக் கல்விக்குரிய பயிற்றுமொழி யாக அசாமி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தியா முழுமையும் ஆங்கிலராட்சி நிலைபெற்றிருந்தபோது, அசாம் தனியிறைமையுடையதாக விளங்கியது. ஏறத்தாழ 600 ஆண்டுகளாக 'அகோம்' (Ahoms) மன்னர்களால் ஆளப் பெற்று வந்த அசாம் 1826-இல் ஆங்கிலர் ஆளுகைக்கு உட்பட்டது. பர்மாவிலிருந்து வந்த படையெடுப்பாளர்க்கு இரண்டகம் கொண்ட அசாம் படைத் தலைவன் ஒருவன் காட்டிக் கொடுத்தமையினால், தாக்காவிலிருந்த ஆங்கிலர் மன்னருக்கு உதவுவதுபோல் வீழ்த்தி விட்டனர்.

கல்கத்தாவிலிருந்து வங்காளப் பாபுக்கள் (Bengali Baboos) ஏராளமாய்க் குடிபெயர்ந்து அசாமில் நிலைபெற்றனர். இந்தியக் குமுகாய அமைப்பில் அவரே மேனிலையிலிருப்பதால் அனைத்து ஆட்சியதிகாரத்திலும் அமர்ந்தனர். ஆள்வினை, அஞ்சல், தொடர் வழி, சட்டம், ஆசிரியத் தொழில், மருத்துவம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் நீக்கமற இப் பாபுக்களே நிறைந்து காணப்பட்டனர்.

கற்றறிந்தவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளும் இவர்கள், உள்நாட்டு அஃதாவது அசாமிய மக்களின் மொழி, பண்பாட்டு மலர்ச்சிக்குப் பாடுபடுவதற்கு மாறாக, சூழ்நிலைகளைத் தங்களுக்குச் சார்பாக்கிக் கொண்டு, அசாமிய மொழி ஒரு புன்மொழி யென்றும், வங்காள மொழியின் ஒரு திரிபு நடைமொழி யென்றும் ஆங்கில ரையே எழுதும்படி செய்தனர். ஆனால் 1837-க்கு முன்னரே அசாமி வழக்கு மன்ற, கல்விமொழியாக விருந்தது.

வங்காளப் பாபுக்களுடனே வந்த ஆங்கிலர் வங்காளியர் அசா மிற்குள் நுழைந்து குடிபுகுவதற்கு வழிகளையமைத்துக் கொடுத்த னர். 1901-1971 ஆகிய எழுபதாண்டுக் காலத்தில் அசாமின் மக்கள் தொகைப் பெருக்கம் இந்தியாவின் பிற மாநிலங்களை விட மிகுதியாக விருந்தது. 1901-இல் 33 இலக்கம் மக்களைக் கொண்ட

இம் மாநிலத்தில் 1971-இல் 150 இலக்கம் பேர் வாழ்வதாகக் குடி மதிப்புக் காட்டியது. இக்கால இடைவெளியில் 500% ஆக மக்கள் தொகைப் பெருக்கம் உயர்ந்துள்ளது. ஆனால் இந்தியாவின் மக்கள் தொகைப் பெருக்கம் 130 விழுக்காடேயாகும்.

ஆண்டு	மக்கள் தொகை	பத்தாண்டு வேறுபாடு	விழுக்காட்டு வேறுபாடு அசாம்	விழுக்காட்டு வேறுபாடு இந்தியா
1901	3372114	—	—	—
1911	3939821	+567707	+16.84	5.7
1921	4735386	795565	20.19	—0.3
1931	5684775	949389	20.05	11.0
1941	6847576	1162801	20.45	14.2
1951	8225058	1377482	20.12	13.3
1961	11103392	2878333	34.99	21.6
1971	14957542	3854150	34.71	24.6

மேலே குறிப்பிட்ட 130 விழுக்காட்டு அளவில் மக்கள் தொகை பெருகினால் அசாமில் இன்று மொத்தம் 76 இலக்கம் பேரே இருத்தல் வேண்டும். ஆனால் இக்கால் 160 இலக்கம் பேர் வாழ்கின்றனர். இவ்வாறு அசாமில் மட்டும் மக்கள் பெருகிவரக் கரணியமென்ன? அப்படிப் பெருகி வருவோர் யாவர்? இன்று வங்காள தேசம் என அழைக்கப்படும் கிழக்கு வங்காளத்திலிருந்து குடிபெயர்ந்த வங்காளியரே அவர்கள். 1881-1891 ஆகிய பத்தாண்டுகளில் கோவல் பாரா (Goalbara) மாவட்டத்தின் மக்கள் தொகை பெருக்கம் 1.4 விழுக்காடு மட்டுமே. 1891-1900 ஆகிய அடுத்த பத்தாண்டுகளில் 2 விழுக்காடு உயர்ந்தது. 1901-1911 ஆகிய பத்தாண்டுகளில் 30% பெருகியது. 1911-ஆம் ஆண்டுக் குடிமதிப்பின்படி கோவல் பாரா மாவட்டத்தில் மட்டும் 11800 பேர் குடிபெயர்ந்தோர் காணப் பட்டனர். இவர்கள் மாநிலத்தில் 20% தொகையினராவர்.

1931-இல் குடிமதிப்பு ஆணையாளராக விருந்த சி. எசு.முல்லன் (I. C. S.) என்பார், "1821-இல் அசாமின் மீது படையெடுத்த பர்மியர் ஏற்படுத்திய பண்பாட்டுச் சீர்குலைவைவிடக், கிழக்கு வங்காளத்தின் இசுலாமிய மாவட்டங்களிலிருந்து மைமென்சிங் (Mymensingh) பகுதியிலிருந்து குடிபெயர்ந்த மண்வெறி கொண்ட வங்காளியரால் ஏற்பட்ட அழிவே மிகுதியாகும். 1921-இல் முதல் படை கோவல்பாராவைக் கைப்பற்றியது" என்று எழுதினார். 1921-31 ஆகிய பத்தாண்டுக்குள் கோவல்பாரா முழுமையும் இரண்டாவது படை கைப்பற்றியது. எறும்புச் சாரை போலும் ஊடுருவல் செய்த வங்காளிகள் 25 ஆண்டுகளுக்குள் 5 இலக்கம் பேராகப் பெருகினரென ஆர். பி. வாகை வல்லா (R. B. Vaghai walla) (I. C. S.) என்பார் கூறுகிறார்.

இவ்வூடுருவல், படைகள் புகுந்தது போலல்லாமல் ஆரவார மற்றுச் சன்னஞ்சன்னமாக நிகழ்ந்து வந்தமையால் இதனைக் கண்டறிய முடியவில்லை. இவர்கள் உள்ளூர் அதிகாரிகளைக் கண்டு கொள்வதில்லை யென்றும், இத்தகைய ஊடுருவலால் அசாமிய மக்கள் நாட்டை விட்டே வெளியேற வேண்டுவதேயென்றும் எசு. பி. தேசாய் (**I. C. S.**) என்பார் எழுதுகிறார்.

அசாமில் நிகழ்ந்து வரும் குடிபெயர்வைத் தடுக்க வழி செய்வதாக **1-12-1937**-இல் நேரு, அசாம் பேராயத் தலைவர் பி. ஆர். மேதி (தமிழ்நாட்டின் மேனாள் ஆளுநர்) என்பாருக்கு ஒரு மடல் எழுதியுள்ளார். ஓராண்டுப் பேராய ஆட்சி இடையிட்ட சிறுபான்மை முசுலிம்களின் வயவர் சாதுல்லா தலைமையிலான அரசு, இக் குடி பெயர்விற்கு ஆதரவளித்தது. கிழக்கு வங்காளத்திலிருந்து பெருவாரியாக முசுலிம்களைக் குடியமர்த்துவதன் மூலம் அசாமியரைச் சிறுபான்மையினராக்குவதே அவர்கள் நோக்கமாகும். காசுமீரத்திற்கு அடுத்ததாக அசாமை முசுலிம் மயமாக்குவதில் மேற்கொண்ட நடவடிக்கைகளால் முசுலிம்கள் அசாமின் மக்கள் தொகையில் **26** விழுக்காட்டினராயினர். இதனால் அசாமில் வாழ்வோர் **அனைவரும்** இந்தியரல்லரென்பது தெளிவாகிறது.

பாக்கித்தானப் பிரிவினைக்கு முன்னர் அசாமையும் அதனுடன் இணைக்கவே ஆங்கில அமைச்சரவைக் குழு தீர்மானித்தது. **1946**-இல் கோபிநாத் போர்தலோய் தலைமையிலமைந்த பேராய அரசு, மாநிலச் சட்டப் பேரவையில் இத் தீர்மானத்தை மறுத்துத் தள்ளியது. இந்தியாவுடன் அசாம் இணைக்கப் பெறும் தீர்மானத்தைக் காந்தியும் ஆதரித்தார். இவ்வாறு கிழக்குப் பாக்கித்தானத்திலிருந்து அசாம் விடுபட்டது.

நேரு—இலியாகத்தலி ஒப்பந்தத்தின்படி இந்தியாவிலிருந்து பாக்கித்தானத்திற்குள் நுழைவதற்குக் கடவைச்சீட்டு பெறப்பட வேண்டும். ஆனால் அசாமிற்கு மட்டும் இது பொருந்தவில்லை. கடவைச்சீட்டு இன்றியே கிழக்குப் பாக்கித்தானத்திலிருந்து ஏராளமான பேர் குடியேறினர்.

1951-இல் குடிமதிப்பு ஆணையாளராக விருந்த வாகைவல்லா என்பார், **1948-49**-ஆம்ஆண்டுகளில்ஆயிரக்கணக்கான முசுலிம்கள் அசாம் செல்ல வேண்டி, பத்ராபூரிலிருந்து உலும்திற்கு நாள்தோறும் வழியேகினரென்றார்.

மதவழிப்படியாகப் பிரிந்து தனி நாடு அமைத்துக் கொண்ட பின்னரும் அரசும் அதிகாரிகளும் மைமென்சிங், சில்கெட், சிட்ட

காங் பகுதிகளிலிருந்து முசுலிம்கள் பெருவாரியாக வெளியேறி அசாமில் குடியேறுவதைத் தடுக்கவில்லை.

1952-க்குப் பின்னரும் 1952-64 ஆகிய ஆண்டுகளில் நேருவின் உறுதிமொழி செயலாக்கப்படவில்லை. மதக் கலகங்களினால் இந்துக்களும் கிழக்குப் பாகித்தானத்தை விட்டு வெளியேறினர். அதே அளவில் முசுலிம்களும் வெளியேறி அசாமில் புகுந்தனர். அக். 1951-திசம்பர் 1959 ஆகிய காலத்தில் 13000 பேர் போக்காவணம் (Travel Document) எதுவுமில்லாத அயலார் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. 1961-1978 ஆண்டுகளில் 291919 பேர் இருப்பதாகத் தெரியவந்தது. இந்தக் கணக்கெல்லாம் தோராயமான மதிப்பீடே.

கிழக்குப் பாகித்தானம் வங்காள தேசமான பின்னர் 13 இலக்கம் பேர் அசாம் மேகாலயா மாநிலங்களில் நுழைந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. வங்காளியரோடு நேப்பாளியரும் இங்குப் புகுந்தனர்.

ஆண்டு	மக்கள் தொகை	பத்தாண்டு வேறுபாடு
1951	101335	—
1961	182925	48.1%
1971	353673	48.2%

1951-71-இல் மொத்த மக்கள் தொகையில் நேப்பாளியர் தொகை 13% ஆக உயர்ந்தது. 1961-இல் 23777 பேரும், 1971-இல் 45981 பேருமிருந்தனர்.

மொழிவழியாக மட்டுமன்றி, மத, பண்பாட்டு, பொருளியல் நிலைகளிலும் இந்நெருக்கடி சூழ்ந்தது. பிரம்மபுத்திரா மாவட்டங்களில் 70 இலக்கம் பேரில் வங்காளியர் மட்டும் 10 இலக்கம் பேராவர். போக்குவரத்து, செய்தித் தொடர்பு, தொடர்வழி, தொலைவரி ஆகிய துறைகளில் 57% அஃதாவது 75000 பேரில் 43000 வங்காளியராகவும் அனைத்துப் பிற துறைகளில் மூன்றில் ஒரு பகுதியினர் 424000 பேரில் 139000 பேர் வங்காளியரும் நிறைந்திருந்தனர்.

இந்திய அரசின் உள்துறையின் மூலமாக இவ்வாறு அசாமில் ஊடுருவிய இவ் வெளியார் அகவை, கட்டணச் சலுகைகளும் பெற்றனர். அரசுப் பணிகளில் நுழைய அசாமியர்க்கு 25 ஆண்டுகளும் வந்தோர்களுக்கு 45 ஆண்டுகளுமென உறுதி செய்யப்பட்டது.

ஒப்போலையர் பட்டியலிலும் இத்தகைய ஊடுருவல் வேலைகள் நடந்தேறின.

	ஆண்டு	ஒப்போலையர்	ஏற்றம்	ஏற்றம்%
	1957	4495357	—	—
	1962	4942816	449459	10.00
	1966	5585056	642240	12.99
	1970	5701805	116749	2.09
	1971	6296198	594393	10.42
மார்ச்சு	1977	7229543	933345	14.82
நவம்பர்	1977 (78-க்கு)	7974476	744933	10.30
	1979 (வரைவு)	8537497	563021	7.06

1957-70 ஆகிய ஆண்டுகளில் ஒப்போலையர் பட்டியலில் 1208448 பேர் கூடியுள்ளனர். ஓராண்டுக்கு ஓரிலக்கம் பேரே மிகுந்திருத்தல் வேண்டும் ஆனால் 1970-79 ஆகிய 9 ஆண்டுகளில் ஆண்டுக்கு 315077 மேனி 2835692 பேர் கூடுதலாக இடம் பெற்றுள்ளனர். இது மும்மடங்குப் பெருக்கமாகும். 1977-ஐ விட 1980-இல் 18.85% பேர் பட்டியலில் கூடுதலாக இடம் பெற்றுள்ளனர். இஃது இந்தியாவில்-மிகுதியாக இடம் பெற்றுள்ள மாநிலங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் 2.72% பேரே கூடுதலாக வுள்ளனர். இதுவே குறைந்த அளவாகும்.

இந்தியாவின் தலைமைத் தேர்தல் அதிகாரியான சாக்தர், "வடகிழக்குப் பகுதியில் ஒப்போலையின் பட்டியலில் வெளியார மிகுதியாக இடம் பெற்றுள்ளனர். 1971-இல் அசாமில் மக்கள் தொகை 34.91% உயர்ந்துள்ளது. அண்டை மாநிலங்களிலிருந்து நாள்தோறும் ஊடுருவல் நடந்து வருகிறது. 1991-இல் இக் கூடுதல் 100% ஆகும். அயலாரே அசாமில் பெரும்பான்மை யாவர்" என்றார்.

அரசியல் கட்சிகளும் குடியுரிமைப் பற்றி உசாவல் எதுவுமின்றியே ஒப்போலையுரிமை வழங்க வேண்டுமெனக் கோருகின்றன.

மங்கல்தோய் பாராளுமன்ற உறுப்பினர் ஈரலால் பதோவாரி இறந்தமையினால் அங்கு இடைத் தேர்தல் நடந்தது. மொத்த ஒப்போலையர் 6 இலக்கம் பேராவர். 70000 பேர்கள் ஐயப்பாட்டிற் கிடமாயினர். அதில் 45000 பெண்கள் வெளியாரென்று அறமன்றத்திலேயே அறிவிக்கப்பட்டது.

முதன் முதலாக, அசாமில் ஊடுருவிய இவ் வெளியாரைக் கண்டுபிடித்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட கோலப் போர்பாரா தலைமையிலான 'சனதா' அமைச்சரவை வீழ்த்தப்பட்டதிலிருந்தே இதனை ஊகிக்கலாம்.

இவற்றை யெல்லாம் கண்டு அசாமியர் வாளாவிருக்கவில்லை' 1973-இலிருந்தே கிளர்ச்சி செய்து வருகின்றனர். 1974-ல் 21 புள்ளி யறிக்கையில் வெளியார் கண்டுபிடிப்பும் வெளியேற்றமும் முன் வைக்கப்பட்டன. இதற்கான முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப் படவேயில்லை. மக்களவைக்கான பொது இடைத் தேர்தலில் இச் சிக்கலைத் தீர்க்க விரைந்த வலிய நடவடிக்கைகள் தேவையென்பதற் கான மக்கள் கருத்துத் திரட்டி உருவாக்கப்பட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் அதிகாரி தாம் முன்னர் தெரிவித்த கருத் திற்கு மாறாக "ஒப்போலையர் பட்டியலில் இடம் பெற்றவர் யாவரும் இந்தியக் குடிமக்களே யாவர்" என்று முரணுகப் பேசுகிறுர். இதன் மீதான தமது கருத்தை 18-9-1979-இல் அசாம் அரசும் செய்தி யறிக்கையில் "ஒப்போலையர் பட்டியலில் சேர்க்கப்பட்ட எவரும் குடி யுரிமைப்படி நீக்கப்படக் கூடாதெனத் தேர்தல் ஆணையம் வலி யுறுத்துகிறது. மேலும் ஒப்போலையர் பட்டியல் சரிபார்ப்பு வேலைகள் தேர்தல் முடிந்த பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டுமென அறி வுறுத்துகிறது" என்று வெளியிட்டது.

அசாமியர் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டிப் போராடி வருகின்றனர். அனைத்து அசாம் மாணவர் ஒன்றியம் (All Assam Students' Union) அனைத்து அசாம் மக்கள் பேரவை (All Assam Gana Sangam Parishad) ஆகியவற்றின் தலைமையில் வெளியார் பட்டியலிலிருந்து நீக்கப்படும் வரை போராட்டம் நடத்தி வருகின்ற னர். இலக்கக்கணக்கானேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். திசம்பர் 12-17 வரையிலான ஒரு கிழமை போராட்டத்தின்போது கௌகாத்தியில் மட்டும் 5 இலக்கம் பேர் சிறையில் தள்ளப்பட்டனர்

தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் பதினுன்கு பாராளும் மன்றத் தொகுதிகளில் இரண்டுக்கு மட்டுமே தேர்தல் நடந்தது. பத்துத் தொகுதிகளுக்கான வேட்பமே (Nomination) ஒன்று கூட இல்லை. பேகம் அபிதா (மேனுள் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலியகமது வின் மனைவி)யின் வேட்பம் தள்ளப்பட்டது. இன்னெருவர் விலகிக் கொண்டார். கார்பி அங்கிலாங் மலைவாழ் மக்களின் திறமான ஒத்துழையாமை இயக்கம் தேர்தல் ஆணையரைத் தேர்தலுக்கு எதி ராகும்படி தூண்டியது.

வங்காளியர் நிறைந்திருக்கும் சாச்சார் மாவட்டத்தில் இரு தொகுதிகளில் மட்டும் தேர்தல் நடத்தியதன் மூலம் அரசு, அசாம் மக்களின் உரிமைக் குரலைப் புறக்கணித்தது. அத்துடன் இரக்க மற்ற ஒடுக்கு முறைகளையும் கையாண்டது. துளியாசன் (Duliasan) எண்ணெய் நகரில் சனவரி 18-இல் நடுவண் காவலர் (C P) அடக்கு முறையில் இறங்கி பெண்கள் பலரின் கற்பபைச் சூறையாடினர். 1962-இல் சீனப் படைகள் கூட இவ்வாறு நடந்து கொண்டதில்லை.

ஆனால் ஒரே நாட்டினரான இவர்கள்தாம் ஈவிரக்கமற்று கொடுமைகள் புரிந்தனர். மக்கள் இறுதிவரை போராடத் தீர்மானித்து விட்டனர். முன்னர் எப்போதும் இல்லாத வகையில் அ. அ. மா. ஒன்றியமும் அ. அ. ம. பேரவையும் மக்களைப் போராட்டத்திற்கு அழைத்துள்ளது. மூதன் முறையாக அகவை வரம்பின்றி ஆயிரக் கணக்கான மகளிர் வீட்டை விட்டு வெளியில் வந்து ஆடவரின் எண்ணிக்கையைவிட மிகுதியாகப் போராட்டத்தில கலந்து கொண்டனர்.

மாணவர் தலைவர்களுடன் தீர்வு காண்பதற்கான பேச்சுகளை நடத்துகிறார் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி. நடுவணரசு முகாமைக் கோரிக்கைகளை யேற்பதாக ஒப்புதல் அளித்துள்ளது.

1952-இலிருந்தே வெளியாரின் குடியேற்றம் உசாவப்பட வேண்டுமென 27-6-1962-இல் நேரு உறுதியளித்தார். வெளியார் சிக்கல் 1951-ஆம் ஆண்டுத் தேசியக் குடியுரிமைப் பதிவுச் சட்டம் மற்றும் 1952-ஆம் ஆண்டு ஒப்போலையர் சட்டம் (National Citizenship Register of 1951 and the Voters' list of 1952) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்பட வேண்டுமென்னும் கருத்திலேதான் அசாம் மக்கள் உள்ளனர்.

தீர்மான முடிவுகள் காண வேண்டுமாயின் கீழ்க்காண்பவை பின்பற்றப்பட வேண்டும்.

1) இந்திய அரசியலமைப்பு, குடியுரிமைச் சட்டம் வெளியார் சட்டம் ஆகியவற்றில் கண்டவாறு வெளியார் கண்டுபிடிக்கப்பட்டு அசாம் மற்றும் தென்கிழக்கெல்லைப் பகுதியிலிருந்தே வெளியேற்றப் படவேண்டும்.

2) (அ) மேற்கொண்டும் ஊடுருவல் செய்யாவாறு எல்லைத் தடுப்பு வலுவாதல் வேண்டும்.

(ஆ) 620 கி. மீ. அசாம்—வங்காள தேச எல்லைப் பகுதியில் தடுப்புக்காவல் நிலையங்கள் மிகுதியாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

(இ) 2 கி. மீ. அளவில் ஆள் புகா எல்லைப் பகுதி அமைக்கப்படல் வேண்டும்.

(ஈ) குறுகிய நலன் கருதிச் செயலாற்றும் எத்தகைய கவிழ்ப்புத் திட்டங்களையும் முறியடிக்க எதிர்காலத்தில் உள்நாட்டு மக்களைக் கொண்ட படைகளை எல்லைப்புறத்தில் நிறுத்தி வைத்தல் வேண்டும். (கடமையில் வழுவிய, ஊழல் மலிந்த எல்லைப் பாதுகாப்புப் படைகளின் மேல் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.)

3) வெளியார் முற்றிலுமாக நீக்கப்பட்ட ஒப்போலையர் பட்டியல் அணியமாக்கப்படல் வேண்டும்.

4) 1951-ஆம் ஆண்டுப் பதிவை அடிப்படையாகக் கொண்டு தேசியக் குடிகள் பதிவேடு தொகுக்கப்படல் வேண்டும்.

5) குடிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படல்வேண்டும்.

6) அடுத்த 15/20 ஆண்டுகளில் மக்கள் வேலை வாய்ப்பு, பொருளீட்டல், நிலைத்த குடியமர்வு ஆகிய பாதுகாப்புரிமைகள் அரசியலமைப்பில் ஏற்படுத்தப் பெற வேண்டும்.

7) அண்டை மாநிலங்களான மேற்கு வங்கம், திரிபுரா ஆகியவை வழங்கிய பெருமளவிலான குடியுரிமை மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். அசாமில் நிலைத்த குடியிருப்பு வேண்டுவோருக்கு உறுதிப்படுத்தும் சான்றிதழ் முதலியன வழங்கும் முழு அதிகாரமும் அசாம் அரசுக்கே இருத்தல் வேண்டும்.

8) அமெரிக்க உருசிய நாடுகளில் உள்ளது போல், வேறு மாநிலங்களிலிருந்து மிகுதியாகக் குடிபெயரும் பிறரால் அசாம் மக்கள் துடைத்தெறியப்படாமலிருக்க இரட்டைக் குடியுரிமை முறை (Dual Citizenship) உருவாக்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்பு 7-ஆம் அட்டவணையில் 81-ஆம் இனத்தில் வழங்கப்பட்ட மாநிலங்களுக்கான குடிபெயர்வு நடுவணரசால் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

தனித்த தங்கள் மொழி, பண்பாட்டு நிலைகளைக் காத்துக் கொள்வது குற்றமெனில் அசாம் மக்கள் அத்தகைய குற்றத்திற்கு ஆளாகட்டும். 1947-இல் 71% ஆக விருந்த திரிபுரியர் வெளியார் குடியேற்றத்தால் 1971-இல் 27% ஆகி விட்டனர். இதே நிலைதான் அசாமிலும் ஏற்படும்.

இத்தகைய நெருக்கடி நிலையில் சரியான சிந்தனையுடைய இந்தியர் யாவரும் அசாமியருக்குச் சார்பாகவே இருப்பரென எதிர்பார்க்கிறோம். அசாமியரின் இச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கான பொதுக் கருத்தை உருவாக்குவது நல்லுள்ளம் கொண்ட ஒவ்வொருவரது புனிதமான கடமையாகும்.

இந்த நெருக்கடி அசாம் மாநிலத்தினது மட்டுமல்லாமல் இந்தியா முழுமைக்குமான ஒரு தேசியச் சிக்கலாகவே உருவாகியுள்ளது. உரிய காலத்தில் இதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் காணப்படாவிட்டால் அயலார் ஊடுருவலால் ஏற்படும் சிக்கல் இந்தியாவின் ஒற்றுமைக்கே உலைவைப்பதில் முடியும்.

—**'இராவணன்'**

(அசாம் பண்பாட்டுக் கழக வெளியீட்டைத் தழுவி எழுதியது)

பாலத்தீன விடுதலை இயக்கம்

—செம்பியன். வல்லத்தரசு.

முதலாளியத்தின் சீரழிவிலிருந்து பொதுவுடைமை நோக்கி வளர்ச்சியடையும் நாடுகள் நாளும் கடுமையாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. வல்லாண்மை நாடுகளின் குடியேற்ற நாடுகள் விடுதலை பெற்றுத் தன்னுட்சியடைந்து வருகின்றன. அண்மையில் நீண்ட போராட்டத்திற்குப்பின் இருண்ட கண்டத்தின் 'சிம்பாவே' விடுதலை யடைந்தது. விடுதலைக்காகவும், பெற்ற விடுதலையை வல்லாண்மைகளின் கீழறுப்புகளிலிருந்து காப்பதற்காகவும் போராடும் நாடுகளுக்கிடையில், வாழ்ந்த இடத்திலிருந்து விரட்டப் பட்டு, நாடற்ற ஏதிலிகளாய்த் தங்களுக்கெனத் தனி நாடு காணப் போரிடும் பாலத்தீன மக்களது புரட்சிகரப் பேரியக்கந்தான் **பாலத்தீன விடுதலை இயக்கம்** (Palastine Liberatian Organisation). நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் இவ்வியக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. அண்மையில் இந்தியாவும் இவ்வியக்கத்தின் படிநிகராளியர் அலுவலகம் அமைக்க அனுமதித்ததோடு, இயக்கத் தலைவர் **யாசர் அரஃபாத்** அவர்களுக்கு அரசியல் நடைமுறைகளுக்கு மாறுகப் பெரும் வரவேற்பும் அளித்துள்ளது பாராட்டிற்குரியது.

1967-இல் அரபு இசுரேல் போரில்,அரபு நாடுகளின் படுதோல்வியின் விளைவாக வெடித்ததுதான் இவ்வியக்கம். இஃது ஒரு தனி அமைப்பன்று. இது பல்வேறுபட்ட கருத்துகளையுடைய குழுக்களும் தலைவர்களும் அடங்கிய ஒன்ருகும். மொத்தம் பன்னிரண்டு கட்சிகள் – படைப் பிரிவுகளுடன் — இதில் பங்கு பெறுகின்றன. இதில் உள்ள பெரும் பிரிவு 'அல்-ஃபத்தா' (Al Fatah), 1965-இல் தோன்றியது. இதன் தலைவர் **யாசர் அரஃபாத்**. இவர் மார்க்சியலார் அல்லர். முகமதிய மத இயக்கத்தோடு தொடர்புள்ளவர். எகிப்தில் பொறியியல் படித்தவர். நீண்டநாள் இயக்கத் தலைமையில் இருப்பதால் எல்லாப் பேச்சுகளும் இவருடனேயே தொடங்கும்.

இயக்கத்தின் பதினைந்து செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பாலோர் அல்-பத்தாவைச் சேர்ந்தவர்கள் —அல்லது ஆதரவாளர்கள். 1969-இல் கெய்ரோவில் கூடிய இயக்கக் கூட்டத்தில் அரஃபாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செயற்குழுவானது பல்வேறு குழுக்களைச் சார்ந்த முந்நூறு உறுப்பினர்கள் கொண்ட பாலத்தீனியத் தேசியக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

அரபாத்தின் 'அல்-பத்தா'வுக்கு அடுத்த பெருங்குழு, 'பாலத்தீனிய விடுதலைக்கான மக்கள் முன்னணி (Papular Front for Liberation of Palastine) ஆகும். இஃது ஒரு மார்க்சிய முற்போக்குக் குழுவாகும். இதன் தலைவர் **பர். சியார்சு அப்பாசு**

இலாடில். 1925-இல் பிறந்தவர். பெய்ருட்டிலுள்ள அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் மருத்துவம் படித்தவர். 1959-இலிருந்து தமது மருத்துவமனையைப் புரட்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தியவர். மனைவியையும் இரு குழந்தைகளையும் இப்பணிக்காக ஒதுக்கியவர்.

இம் மக்கள் முன்னணி (PFLP), 1968 சூலை 22-ஆம் நாள், நாற்பத்தெட்டுப் பயணிகளை ஏற்றிக்கொண்டு உரோமிலிருந்து தெல்அவிவ் செல்லவிருந்த EIAI 707 வானூர்தியை முதன் முறையாகத் திசை திருப்பிக் கடத்தியதன் மூலம் தன் இருப்பை வெளியிட்டது. இரண்டு பாலத்தீனியர், சிரியாவைச் சேர்ந்த ஒருவர் என மூன்று புரட்சியாளர்களால் கடத்தப்பட்ட அவ்வானூர்தி அல்சீரிசில் இறக்கப்பட்டது. உடனே அல்சீரிய அரசு, இசுரேலுடனான போர் தொடங்கிவிட்டதென அறிவித்தது. பின்னர் ஒ. நா. தலைவர் ஊதாண்டின் வேண்டுதலால் பிணையாளர்கள் விடுவிக்கப்பட்டனர். மீண்டும் மகமது மொகம்மது இசா, மகர் உசேன் அல் யமானி என்ற புரட்சியாளர்கள், 1968 திசம்பர் 26-இல் ஏதென்சிலிருந்து நியூயார்க் செல்லவிருந்த AIEI 707 வானூர்திக்கு வெடி வைத்தனர். சிறைபிடிக்கப்பட்ட அவ்விருவரையும் மீட்க 1970 சூலை 22-இல் கிரேக்க வானூர்தி ஒன்று கடத்தப்பட்டது. விடுதலை இயக்கத்தின் பெயரில் நடைபெற்ற இது போன்ற செயல்கள் பெரும்பாலும் மக்கள் முன்னணி (PFLP) நடத்தியனவே. 'அரபு மக்கள் மீது இசுரேல் தொடுத்த கொடுஞ்செயல்களுக்கு எதிராகவே இத் தாக்குதல்கள்' என முன்னணி அறிவித்தது.

மக்கள் முன்னணி (PFLP)யின் இரண்டாவது தலைவராக **பர். வாடி இலியாசு அதாத்** பொறுப்பேற்றார். 1930-இல் சபாத் நகரில் பிறந்தவர். பல் மருத்துவர். பெய்ருட்டின் அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் அப்பாசுடன் படித்தவர். மார்க்சிய விளக்கங்களை அங்கிருந்த அமெரிக்கப் பேராசிரியர்களிடம் கற்றவர். இவர் பல நாடுகளின் புரட்சி இயக்கங்களுடன் தொடர்புள்ளவர். லிபியாவின் கடாஃபி, அல்சீரியாவின் பொமெடின் மற்றும் தெற்கு ஏமன், ஈராக் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்.

பாலத்தீனியர்களுக்கு எதிராகப் பேசிய சோர்டானிய தலைமை அமைச்சர், எகிப்துக்கு சதாத்தின் அழைப்பின் பேரில் சென்றபோது நான்கு பாலத்தீனியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஒரு புரட்சியாளன் அவரது உடலிலிருந்து பொங்கும் குருதியில் தன் கைகளைக் கழுவினான். அவர்கள் ஒரு புதிய பிரிவைச் சேர்ந்தவர்கள். அதன் பெயர் 'கருப்பு செப்டம்பர்' (Black Sep ember). 1970 செப்டம்பரில் சோர்டானியப் படை, பாலத்தீனிய புரட்சியாளர்களைக் கொன்ற தன் நினைவாக அப்பெயர் வந்தது. அஃது ஒரு தனி இயக்கமன்று. அல்பத்தாவின் ஒரு படைப் பிரிவாகும்.

'கருப்பு செப்டம்ப'ரின் தலைவர் இருவர். ஒருவர் **அடி அயத்** என்றழைக்கப்படும் **சலாகலாப்.** இவர் அல்பத்தாவில் அரபாத்தின் துணைவர். அடுத்தவர், **அலி ஆசன சலாமே.** இவர் அல்பத்தாவின் துப்பறியும் பிரிவான சிகாசு-அல்-ரசாத்தின் தலைவர். அல்பத்தாவால் கருப்பு செப்டம்பருக்காகத் திரட்டப்பட்டு, சுவிட்சர்லாந்து மற்றும் மேற்கு செர்மனி, இத்தாலி வைப்பகங்களில் எண் கணக்கில் (Numbered Account) உள்ள பணத்தை கையாள்பவர் சலாமேதான். மேலும் பல தொழில்களிலும் பணம் முடக்கப்பட்டுள்ளது. மொத்த மதிப்பு முப்பத்தாறு கோடி உருபாக்கள் என மதிக்கப்படுகிறது.

விடுதலை இயக்கத்திற்கு வேண்டிய பண உதவிகளைப் பெரும்பாலான எண்ணெய் வள அரபு நாடுகள் தாராளமாகச் செய்கின்றன. அரேபியா தனது விற்பனைத் தொகையில் ஒரு விழுக்காடு உதவுகிறது. மேலும் அந்நாடுகளில் பணிபுரியும் பாலத்தீனியர்கள் தமது இயக்க வெற்றிக்காகத் தமது ஊதியத்தில் ஒரு பங்கைத் தவறாமல் அனுப்பி விடுகின்றனர்.

நாடற்ற பாலத்தீனியர்களில் 25000 பேர் இலெபனான் நாட்டில் தங்கியுள்ளனர். அங்கு இயக்கத்திற்கு ஒரு படைத்தளமுண்டு. மேலும் பள்ளிகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் போன்ற மக்களின் தேவைகளையும் இயக்கம் செயல்படுத்துகிறது. ஒய்வூதியம், வேலையற்றோர்க்கு உதவிப் பணம், ஊனமுற்றோர்க்கு உதவி, போரில் மாண்ட மறவர்களின் மனைவியர்க்கு உதவிப் பணம் எனப் பல தேவைகளையும் நிறைவேற்றுகிறது. அதோடு, தொழிலாளர் கழகங்கள், எழுத்தாளர் மன்றங்கள், மகளிர் அமைப்புகள் எனப் பொது அமைப்புகளும் உள்ளன.

பல கொள்கைகளையுடைய குழுக்களின் அணியாகையால் சில கருத்து, செயல் முறை மாறுபாடுகள் அவ்வப்போது நேர்வதுண்டு. எனினும் அரபாத்தின் அல்பத்தாவின் கையே ஓங்கி நிற்கிறது. காரணியம் அது பொதுமக்களின் மனத்துக்கும் அறிவிற்கும் புரியக்கூடிய, எளிதில் செயல்படுத்தக்கூடிய கொள்கைகளைக் கொண்ட அமைப்பாக இருப்பதுதான். மேலும் படைப் பிரிவில் 90 விழுக்காடு அதன் கையில். 1969-இல் ஏற்பட்ட கெய்ரோ உடன்படிக்கைப்படி பத்தாயிரம் படை வீரர்களையும், பத்தாயிரம் போர் பயிற்சி பெற்றவர்களையும் அது போரில் ஈடுபடுத்தலாம். மேலும் அல்பத்தாவை, அல்-சய்கா (AL-SA'IQA) குழுவும், நயத் அவிதாமே தலைமையிலான பாலத்தீனிய விடுதலைக்கான மார்க்சிய முன்னணி (Marxist Democratic Front for Palastine Liberation)யும் ஆதரிக்கின்றன. இவ்விரண்டும் சிரியா மற்றும் அரபியாவின் பொருளுதவி பெறுபவை.

மாற்று அணியில் மக்கள் முன்னணி (PFLP) தவிர ஈராக்கின் உதவியும் சிறுபாண்மை லிபியா மற்றும் அல்சீர்சின் உதவி பெறும் 'அராபிய விடுதலை முன்னணி' (Arab Liberation Front) மற்றும், 'மக்கள் போராட்ட முன்னணி' (Popular Strugle Front) பாலத்தீனிய விடுதலை முன்னணி (Palastine Liberation Front) என்ற இரு சிறு குழுக்களும் உள்ளன. மக்கள் முன்னணி (PFLP) விடுதலை இயக்கத்தில் தலைமையேற்க முடியாவிடினும் அதன் தாக்கம் இயக்கத்தில் மிகுதியாகும். 1974-இல் செயற்குழுவி லிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் முன்னணியைக் குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எதிரணியின் கோரிக்கையோடு கூடிய பாலத்தீனிய தேசியக் குழுக் கூட்டத்தில், அதே அளவு அல்பத்தாவின் உறுப்பினர் எண்ணிக்கையைக் கூட்டவேண்டும் என்று கூறித் தம் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார் அரபாத். பிற்போக்கு நாடுகளோடு இயக்கம் கொண்டுள்ள தொடர்புகளை இடது அணியினர் கண்டித்தபோது அரபாத் சொன்னார். "நீங்கள் என்னையோ அவர்களையோ தாக்கலாம். ஆனால் நான் நமது போராட்டத்திற்காகவும், நம் மக்களுக்கு உணவு கொடுக்கவும் 1978-இல் மட்டும் அரேபியாவிடமிருந்து அறுபது கோடி உருபா வாங்கினேன். வேறு என்ன செய்வது?"

ஈராக்கும் சிரியாவும் நட்பு நாடுகளாகி விட்டதனால் மக்கள் முன்னணி (PLFP), அல்-சய்கா மற்றும் ஈராக் உதவி பெறும் குழுக்கள் அல்பத்தாவுக்குப் போட்டியாக ஒன்று சேர வாய்ப்புள்ளது. எனினும் இவையெல்லாம் கொள்கையளவில் இயக்கத்தினுள் நடைபெறும் சிக்கல்களே. அவை எந்த வகையிலும் பாலத்தீன மக்களின், விடுதலை இயக்கத்தில் முடிவான குறிக்கோளான தனி நாட்டுப் போராட்டத்திற்கு ஊறுவிளைவிப்பன அல்ல. கார்ட்டரும் பெகினும் சதாத்தும் ஒன்று சேர்ந்து எத்தனை 'கேம்ப் டேவிட்' உடன்படிக்கைகள் செய்து கொண்டாலும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல், அதனுடன் பேச்சு நடத்தி முடிவுக்கு வராததால், தனி பாலத்தீனிய நாடு ஒன்று உருவாகாமல் நடுவண் கிழக்கு அரசியல் போராட்டங்கள் ஒரு முடிவுக்கு வரப் போவதில்லை. o

---

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், **காரி, ஞாயிறு** ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக் கொண்டு வர வேண்டும்.

—**அமைச்சர்.**

செய்திகள்

1. முத்தையா—கண்ணகி வாழ்க!

கடந்த விடைத்திங்கள் 13-ஆம் நாள் (26-5-80) திங்கட் கிழமை, காரைக்குடி பாசின். ஆ. மு. ஆறு. பழனியப்பனார் அவர்கள் திருவளர் செல்வனும், மக்கள் கட்சி செயற்குழு உறுப்பினர் திரு. பழ கருப்பையா அவர்களின் இளவலும், நெடுநாளைய தென்மொழி அன்பருமான திருவளர் செல்வன் **முத்தையா**விற்கும், செல்வி **கண்ணகி**க்கும் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி மணவிழாத் தலைவர் கண்டரா மாணிக்கம் மகா இலக்குமி நூற்பாலை இயக்குநர் திரு. **அழகுசுந்தரனார்**, ஆசிரியர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**, திரு. **நா. அழகப்பத் தமிழன்**, திரு. **பழ. கருப்பையா** ஆகியோர் நல்லுரை நல்கினர். இறுதியில் மணமகன் திரு. **முத்தையா** நன்றியுரை கூறினார். விருந்து மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் எல்லா நலனும் வளனும் பெறத் தென்மொழி வாழ்த்துகிறது.

2. மதுரை சட்டக் கல்லூரித் தமிழ்ப் பேரவைச் சிறப்புக் கூட்டம்:

மதுரை, சட்டக் கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சிறப்புக் கூட்டம், கடந்த 6-6-80 பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் திருமிகு. **சண்முகநாதன்** க. மு. (இராமநாதபுரம் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்) அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்புமிகு உணர்வுரையாற்றினார். திருமிகு. **மா. முருகையா பாண்டியன்** (தலைவர், தமிழ்ப் பேரவை) வரவேற்புரை யாற்றினார். செயலர் திரு. கி. **யகேந்திரன்** உரைக்குப்பின், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தமிழ்மொழியும் இனவுணர்வும் பற்றி எழுச்சி மிக்க சிறப்புரையாற்றினார். மாணவர்களும் மாணவியரும் இறுதிவரை மிகவும் அமைந்து கேட்டது குறிப்பிடத் தக்கது. திரு. **பழனியாண்டி** அவர்களின் நன்றியுரைக்குப்பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

3. கோட்டூர்—மலையாண்டிப்பட்டணம்—பாவேந்தர் கருத்தரங்கு:

கோவை, பொழில்வாய்ச்சி, கோட்டூர் மலையாண்டிப்பட்டணத்தில், சென்ற 11-6-80 மாலை 6 மணியளவில், அவ்வூர் அருள்மிகு காமாட்சியம்மன் கோயிலில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தலைமையில், பாவேந்தர் கருத்தரங்கு நடைபெற்றது. புலவர் திரு. **மாணிக்கம்**, 'பாவேந்தர் பாடல்களில் அழகியல், தமிழுணர்வு, என்னுந் தலைப்பிலும், புலவர் **கா. மருதமுத்து** 'பாவேந்தர் பாடல்'

களில் சீர்திருத்தம்' என்னுந் தலைப்பிலும் கருத்துரையாற்றினர். இறுதியில் தலைவர் **பாவலரேறு பெருஞ்சித்திரனர்** உணர்வு மிக்கதோர் எழுச்சி நிறைவுரை யாற்றி, அவ்வூர் மக்களுக்குத் தமிழுணர்வும் இனவுணர்வும் கொளுத்தினர். நிகழ்ச்சி முடிவில் தமிழ்நாடு மின்துறை, காசாளரும், நெடுநாளைய தீவிரத் தென் மொழித் தொண்டரும் ஆகிய **கி. பெருமாள்** அவர்களின் முதல் குழந்தைக்குத் **தமிழ்க்கதிர்** என்று தலைவரவர்கள் பெயர் சூட்டினர். கி. பெருமாள் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

பிற செய்திகள்

1. வெள்ளோடு தென்மொழி முகவர் **வெ. மா. பெரியசாமி** அவர்களுக்கும் கோபி **அரங்கசெல்விக்கும்**, கடந்த 25-5-80 ஞாயிறு காலை மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்புற நடை பெற்றது. மணமக்கள் நீடுவாழ நிறைந்த நெஞ்சுடன் தென்மொழி வாழ்த்துகிறது.

2. கடந்த 25-5-80 ஞாயிறு சென்னை, மாவட்ட நடுவண் நூலகத்தில் அனைத்திந்திய சித்த மருத்துவச் சிறப்பு மாநாடு, திரு. **பி. மூத்துக்கருப்பனர்** அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. தமிழகம் எங்குமுள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டில் மூலிகை கண் காட்சியும், மருத்துவக் கண்காட்சியும் நடைபெற்றன. மாநாட்டின் இறுதியில், மருத்துவ முறைகளில் மிகத் தொன்மையானதும், மற்ற மருத்துவ முறைகளில் இல்லாத பற்பல வியத்தகு நுணுக்கங்களை யுடையதும், தமிழ்மொழியில் மட்டும் வழங்குவதுமான சித்த மருத்துவத்தையும், அம் மருத்துவக் குடும்பங்களையும், அக் குடும்பங் களில் உள்ள பல்லாயிரக்கணக்கான அரிய ஓலைச்சுவடிகளையும் காப் பாற்ற நடுவணரசு மாநில அரசுகளைக் கேட்டுக்கொள்ளும் தீர் மானம் உட்பட, சித்த மருத்துவர்களுக்கு விற்பனை வரி நீக்கம், மருத்துவச் சான்றிதழ் வழங்கும் உரிமை வேண்டல், சிற்றூர்ப்புற மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு அரசு ஊழி யர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் தரக் கேட்டல் முதலிய ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்கப் பெற்றன.

3. கடந்த 1-6-80-இல், புதுவைத் தனித்தமிழ்க் கழகம் ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் நினைவுக் கருத்தரங்கம் ஒன்றைத் தமிழ்த்தளிர் கல்விக் கழக அரங் கில் நடத்தியது. பேரா. திரு. **ம. இரா. பூபதி**, க, மு. அவாகள் விழாவிற்குத் தலைமையேற்று விழாநாயகர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரை நிகழ்த்தினர். புலவர் திரு. **இரா. திருமுரு கன்**, க. மு; கல். மு. அவர்கள், சீ. வே. இயற்றிய 'சமணமும்

தமிழும்' எனும் நூலைப் பற்றியும், கழகச் செயலர் திரு. **க. தமிழ மல்லன்**, க. இ. 'கிருத்துவமும் தமிழும்' எனும் நூல் பற்றியும், புலவர் திரு. **வே. முத்துக்குமரசாமி**, க. மு. 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' எனும் நூலைப் பற்றியும், பேரா. திரு. **மு. சாயபு மரைக்காயர்**, க. மு. நுண்கலைகள் எனும் நூல் பற்றியும் உரை நிகழ்த்தினர். நிகழ்ச்சித் தொடக்கத்தில் திரு. **சி. தமிழ்மாறன்**, க. இ. வரவேற்புரையும், இறுதியில் செயலாளர் நன்றியுரையும் நிகழ்த்தினர்.

நன்கொடைகள்

1. மகாலிங்கபுரம் திரு. இராமச்சந்திரன் என்ற நிலாவழகன் 25-5-80 அன்று தென்மொழி வளர்ச்சிக்கென அளித்த உரு. 10/- மகிழ்வுடன் பெற்றோம்.

2. முகவை மாவட்டம் திருவாட்டி. வளர்மதி கோபால் கோலாலம்பூர் சா. இராமு வழி 30-5-80 அன்று விடுத்த உரு 3/- தென்மொழிக்கு நன்கொடையாக வரப்பெற்றோம்.

3. திருப்பூர் **நா. சுப்புராயன்**, தொடக்கப்பள்ளி ஆசிரியர் அவர்கள் தென்மொழி வளர்ச்சிக்கென 5-6-80 அன்று மனமுவந்து அளித்த உரு. 168/-ஐ தென்மொழி அன்புடன் பெற்றுக்கொண்டது. திரு. **நா. சுப்புராயன்** அவர்களின் தூய தமிழ்ப்பற்றையும், தமிழ்த் தொண்டையும் எண்ணி வியப்பதுடன், அவர்கள்பல்லாண்டு நீடுவாழத் தென்மொழி வாழ்த்தி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

4. பறம்புக்குடி திரு. அ தங்கராசன் அவர்கள், தி. பி. 2011, விடைத் திங்கள் முதல் நாள் (14-5-80) அறிவன் கிழமை அன்று காலை 7 மணியளவில் தம் துணைவியார் திருவாட்டி. சுசிலா அம்மையார்க்கு மூன்றாவதாகப் பிறந்த பெண் மகவிற்கு **'மலர்விழி'** எனப் பெயரிட்டதன் நினைவாக 14-6-80 அன்று உரு. 30/-ஐத் தென்மொழிக்கு நன்கொடையாக அளித்தார். 'மலர்விழி' நலமும் வளமும் பெற்று வாழ, தென்மொழி நெஞ்சுவந்து வாழ்த்துக் கூறுகிறது.

5. நெய்வேலி மு. அறவாழி அவர்கள் தம் நண்பர் உ. த. க. அன்பர் திரு **கோ. கண்ணன் — தயாளு** ஆகியோரின் திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 5/-ஐ 14-6-80 அன்று விடுத்தார். தென்மொழி மணமக்களைப் பல்லாண்டு நிறைவுடன் வாழ வாழ்த்துகிறது.

6. படைத்துறையைச் சார்ந்த திரு. மு. த. சின்னத்துரை அவர்கள், தென்மொழி நன்கொடைக்கென, திரு. ஆர். மனோகரன், திரு. உலூயிசு, திரு. வி. பொன்னையா ஆகிய தம் படைத்துறை நண்பர்களிடமிருந்து தலைக்கு உரு. 5/- மேனியும், திரு. கே. செட்டு என்பவரிடமிருந்து உரு. 4/- உம் ஆக 14-6-80 அன்று மொத்தம் உரு. 19/-ஐ விடுத்தார். நன்கொடை அளித்த படைத்துறை நண்பர்கள் அனைவர்க்கும் தென்மொழி தன் நன்றியை உளமாரத் தெரிவித்துக் கொள்கின்றது.

0

0:787: பைந்தமிழ்ப் பாவலவ, பணிவார்ந்த வணக்கம்; பல்லாண்டு வாழ்ந்தொளிர்க. தினமணிக் கதிரின் திமிரான போக்குத் திடுமென ஏற்பட்டதன்று. அதன் கெடுமதி காட்டும் நெடுநாளைய எண்ணமே. ஒவ்வொரு சாதியின் பெயராலும் சிறப் பிதழ்கள் வெளியிட்டு, மாண்ட நந்தமிழினத்தை மீண்டும் மீண்டுஞ் சாதிப் புதைசேற்றுள் அமிழ்த்தித் தம்மின உயர்வு தேடவும், சிறப் பிதழ்கள் வரிசையில் பின்பு பிராமணர் சிறப்பிதழ் வெளியிட்டுப் பெருமை பெறவும் முயலுந் 'தீபம்' நா. பா. தென்மொழி யுணர்வால் வளர்ந்து வருந் தமிழினத்தின் நலத்தை—வளத்தைத் தமிழின் பெய ரால் உறிஞ்சிக் கொழுக்கும் அட்டை போல்வர் என்பதில் ஐயுற வின்று. தீபம் நா. பா. போன்ற இதழாசிரியர் பிறரது கொடு முயற்சியினை ஆங்காங்குள்ள தமிழ் மன்றங்கள் கண்டறிந்து, அவற்றை—முறியடிக்கும் எதிர் வினையாகத் துண்டறிக்கைகள் அச்சிட்டு, அங்கிங்கெனாதபடி எங்கும் பரப்புதல் வேண்டும். தென் மொழியன்பர் பலருந் தனித்தனியே, அன்னாரது இன்னாத செயலினை எதிர்த்துக் கண்டன மடல்கள் விடுப்பின், அவையனைத்துஞ் செவி டன் காதிலூதிய சங்கேயாகும். தமிழ் மன்றங்கள் வாயிலாகக் கொழுத்தெழுதித் தமிழ் கொல்லுங் கதிருக்கெதிராக வினையாற்றின் சிறிதாயினும் பயன் விளைதல் ஒருதலை.

முற்காலப் புலவோர்க்கிணையாகப் படைத்து வரும் நூறாசிரியம் வெடிக்கின்ற புரட்சிக்கு வித்திட்டுத் துவளாத நல்லிளைஞர் பலரை யுந் துடித்தெழச் செய்தலுறுதி. 'தமிழ் தமிழ் என்றார்வமுடன் குரலெழுப்பித் தடைக்கற்கள்தமை இடித்திடும் முயற்சியில் இன்னே ஈடுபடுத்தும் வல்லமையுள்ள தங்களின் வெல்லரிய பாடல்கள், புதுப் பாப் புனையும் புல்லிய புலமையாளரைப் புறங்காட்டுவிக்குத் திறஞ் செறிந்தன.

தூய் தமிழ் நெறிக்கு மாறுசெல்லும் என்னனைய கூறுகெட்ட வரைக் காணின், சீறிச் சினந்து செந்தமிழ்ப் பாட்டால் அடித்துத் திருத்தும் ஆற்றலுடைய **பாவலர் ஈவப்பனார்** அவர்கள், அடி யேன் அறிவறைபோகிய வேளையில், சிற்றுணர்வுப் பெருக்கில் 'விசிட்ட'ருக்குக் கிறுக்கியவற்றைப் பொறுக்க மாட்டாதவராய் 781-ஆம் எண்ணிட்ட மடல்வழிக் கடிந்து கொண்டதை யறிந்தேன். அவர்தம் தென்மொழிப் பற்றறிந்து வியந்தேன்; பெருமையுற்றேன். அறியாமை கரணியமாக நிகழ்ந்த எளியேனது மீச்செலவினைப் பொறுத்தருளுமாறும், மன்னிக்குமாறுந் தங்களையுந் தங்கள்வழி பாவலர் ஈவப்பனார் அவர்களையும் பணிவடக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன்.

எளியேன் இறக்குந்துணையுந் தூயதமிழுந் தமிழ்நெறியும் யாண்டுந் தனியுரிமையோச்சத் தாள் கொண்டெழுவேன். தென் மொழியே என்விழி; உள்ளொளி; தூய்தமிழ் நெறியே எளியேன் செல்லும் வழி; என்றுங் கைக்கொள்வேன் நற்றமிழ்மொழி. இனி மேற் கொள்ளேன் பாவலர் ஈவப்பனார் தம்பழி! தமிழுந் தமிழருந் தன்னிலை யுணர்ந்து நன்னிலையடையத் தென்மொழிக்கு ஒல்லாங்கு உறுதுணையாவேன். தினமணிக் கதிர் போலும் பிறவற்றின் திமி ரான போக்கினை முடுக்கமாக எதிர்ப்பதில் முன்னிற்பேன்—முறி யடிப்பேன். 'தென்மொழி வெல்லும்' என முழங்குவேன். வாழிய தென்மொழி!

—பெரு. **தமிழ்வேந்தன்**, பவானிசாகர்.

0:788: மாண்புமிகு பெருந்தகைக்கு தங்களின் இளவல் வணக்கமாக எழுதிக்கொண்ட மடல். தங்களின் தென்மொழி இதழைத் தொடர்ந்து அந்தமான் முரசு ஆசிரியர் மூலம் பார்த்து வருகிறேன். ஒவ்வோர் இதழையும் படித்து வரும் எனக்குத் தங்களின் மேல் அளவுகடந்த மதிப்பு உருவாகி உள்ளது. குறிப்பாக இந்த மாத இதழில் 'தினமணிக் கதிரின் திமிரான போக்கு' எனத்தாங்கள் கொடுத்துள்ள அடி கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். தங்களின் அஞ்சாமை கண்டு பெருமிதம் கொள்கிறேன். தங்களின் தென்மொழியைப் படித்து வருவதால் பல பல நன்மைகளை என்னுள் உணர முடிகிறது. தமிழ் மீது தணியாத ஓர் ஆர்வம் ஏற்பட்டுள்ளது.

—க. நக்கீரன், அரசு அச்சகம், போர்ட் பிளேயர், அந்தமான்.

0:789: அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியீர், தங்களுக்கு எழுதுவதில் நான் மகிழ்வடைகிறேன். இது காலம்தாழ்த்தி எழுதப்படும் அஞ்சலே. மன்னிக்கவும்.

முதலில் அறிமுகம். தங்களைப் பற்றிக் கோவையில் வசிக்கும் எனது இனிய நண்பர் கு. வெ. கி. ஆசான் அவர்கள் முதன் முதலில் கடந்த பிப்ரவரி மாதம் நடந்த சந்திப்பின்போது கூறி அறிந்தேன். பின்பு சென்ற மாதம் தாங்கள் அவனுசி அருள்மிகு அவனுசி இலிங்கேசுரர் திருக்கோவில் முன் அமைந்த கொட்டகையில் 'திருக்குறள் – அறம்' பற்றிச் சொற்பொழிவாற்ற வந்தபோது, நேரில் கண்டு, பேசி, கேட்கும் வாய்ப்பைப் பெற்றேன். கம்பீரமான தமிழ்க் குரலை எப்போதும் விரும்புவன். இசைத் தமிழில் சீர்காழி கோவிந்தராசனுர் குரலையும் சொற்றமிழில் ம. பொ. சி யின் குரலையும் கேட்டு தலை நிமிர்ந்து என்னை மறக்கும் வழக்கம் உடையவன். அன்று அவனுசியில் உங்கள் குரலையும் சொல்வன்மையும் கேட்டு மிக மிகப் பெருமையடைந்தேன். நேரமின்மையால் நான் சிறிது நேரத்திலேயே சென்றுவிட நேர்ந்தது. உங்களது கம்பீரமான குரலையும், அடர்ந்த மீசையையும் குறுந்தாடியையும், சொற்பொழிவின் பொருளாழத்தையும் பார்த்துக் கேட்ட குறுகிய நேரத்தில் உங்களை தமிழினத்தின் ஆப்ரகாம் இலிங்கனுகவும், காசுட்ரோ (Costro)வாகவும், லெனினுகவும் கற்பனையில் உருவகப்படுத்தி வியந்தேன். மொழி, இனப் பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் தங்களையே ஈடுபடுத்திக் கொண்டுள்ள உங்களை வாழ்த்தினேன்.

தங்களது சமயம் பற்றிய மற்றும் தனித்தமிழ்க் கொள்கைகளை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவன் என்ருலும், தங்களது அடிப்படைக் கருத்துகளான, தமிழின, மொழி, நாட்டுப் பாதுகாப்பு, விடுதலை, உயர்வு ஆகியவற்றை முற்றிலும் ஏற்றுக்கொண்டுள்ளேன்.

தமிழனின் மொழி, இன, நாட்டுக்கு உண்மையில் உயர்வுக்கும் உரிமைக்கும் ஒரு தனி நாடு அமைந்தால்தான் உண்டு. இல்லாவிடில் மெல்ல மெல்ல நலிந்து, மெலிந்து, சிதைந்து அழியும். கண்கூடாக நடந்துள்ளவையே இவை. மேற்கூறிய இலக்குகளை நோக்கித் "தென்மொழி"யின் பணி தொடர்ந்து நடக்கட்டும். என் வாழ்த்துகள்.

—ப. பத்மநாபன் க. மு; ச. இ. சோமனூர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை–600 005 (தமிழகம்)